# பரிசுத்த வாழ்வின் பாதையில்



சாம்சன் பால்

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

# பரிசுத்த வாழ்வின் பாதையில்

சாம்சன் பால்

*பரிசுத்த வாழ்வின் பாதையில்*

இரண்டாம் பதிப்பு
நவம்பர் – **2004**

*சகோ. சாம்சன் பால்* எழுதி வெளியிடும் *"ஜீவ நீரோடை மாத இதழ்"* மற்றும் *"ஜீவ நீரோடை தினசரி தியான நூலின்"* மாதிரிப்பிரதி ஆகியவற்றை தெளிவான முகவரியுடன் கடிதம் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

SAMSON PAUL
126, Muthaiya Muthaliar Street,
Pondicherry - 605 003.
INDIA

Phone : 2236042
e-mail : jeevaneerodai@eth.net

*Typesetting by* : Platinum Graphics Pondicherry - 1.
*Printed by* : United Bind Graphics, Chennai-4 Ph. : 24661807

## ஆசிரியரிடமிருந்து...

இந்த புத்தகத்தில் இடம் பெற்றுள்ள பெரும்பாலான கட்டுரைகள், 1996-க்கு பின்னால் அவ்வப்போது வெளிவந்த "எழுச்சிமலர்" இதழில் நான் எழுதியவையே ஆகும். இதில் இடம் பெற்றுள்ள கட்டுரைகள் யாவுமே ஏற்கெனவே ஆயிரக்கணக்கானோரால் படிக்கப்பட்டு, மிகச்சிறந்த செய்திகள் என்ற சாட்சி பெற்றவையே. நடைமுறை வாழ்க்கையில் கிறிஸ்தவத்தை வெளிப்படுத்த அதிக மான உந்துதல் தருகின்ற இந்த கட்டுரைகள் இன்னும் அநேகருக்கு ஆசீர்வாதமாக பிரயோஜனப் பட வேண்டும் என்ற ஆர்வத்தில் இப்போது அவை புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்த புத்தகம் உங்களுக்கு பல புதிய உண்மை களையும் அறிவுணர்த்துதல்களையும் கொண்டுவரும் என்பது நிச்சயம். கிறிஸ்தவ வாழ்க்கையின் பிரகா சத்தை வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளிலும் வெளிப்படுத்தி, கர்த்தரை மகிமைப்படுத்த இந்த புத்தகம் ஆழ்ந்த தூண்டுதலைத் தரும் என்பதில் சந்தேகமில்லை. இந்த புத்தகத்து செய்திகள் மூலம் கர்த்தர் உங்களோடு இடைபட்டு, இதயத்திற்கு தெளிவையும், தெய்வீக சந்தோஷத்தையும் தந்தருளி ஆசீர்வதிப்பாராக.

*உங்கள் சகோதரன்*

*சாம்சன்பால்*

# உள்ளே...


1. தேவன் நம்மோடிருந்தால் ........................................ 5
2. உங்கள் எதிரி யார்? ........................................ 14
3. தேவனுடைய வாக்குறுதிகள் எப்போது நிறைவேறும்? ........................................ 23
4. கர்த்தருக்கு பிரியமானது இன்னதென்று ........................................ 29
5. பணம்... பணம்... பணம்... ........................................ 35
6. வெற்றியின் நான்கு படிகள் ........................................ 37
7. ஜெபித்தால் மட்டும் ஜெயம் வந்து விடுமா? ........................................ 45
8. தஞ்சமே... இயேசு என் அடைக்கலமே! ........................................ 51
9. என்னுடைய சாதனைகள் எத்தனையோ! ........................................ 58
10. பாலுணர்வும் பரிசுத்த வாழ்க்கையும் ........................................ 62
11. சக்திக்கு மீறிய பிரச்சனைகளின் நடுவில் ........................................ 66




# 1 தேவன் நம்மோடிருந்தால்

தேவன் அருளிய வாக்குறுதிகள் வேதாகமத்தில் ஏராளம் உண்டு. வாக்குறுதிகள் சோர்ந்து நிற்கும் நமக்கு புதிய நம்பிக்கை ஊட்டி திடப்படுத்தி, புதிய வேகத்துடன் நம்மை முன்னோக்கிச் செல்லத் தூண்டுகின்றவைகளாகும். அப்படிப்பட்ட உயிரோட்டம் நிறைந்த வாக்குறுதிகளில் மிக முக்கியமானது "*நான் உன்னோடே இருப்பேன்*" என்ற வாக்குறுதியாகும்.

இந்த வாக்குறுதி தேவனை நமக்கு மிகவும் அருகில் இருக்கிறவராக உணரவும், தைரியம் கொண்டு உற்சாகமாக செயல்படவும் நம்மை ஏவுகின்றது. தேவன் அசாதாரணமான தம்முடைய மாபெரும் திட்டங்களை நிறைவேற்ற சாதாரணமான மனிதர்களைத்தான் தெரிந்து கொள்கின்றார். சாதாரணமான அந்த மனிதர்கள் தங்கள் பலத்திற்கும் தகுதிக்கும் மிஞ்சிய அந்த திட்டங்களைக் கண்டு ஒருகணம் திகைத்து விடுகின்றனர். தங்களால் இது சாத்தியமாகுமா என்று எண்ணி கலங்கி விடுகின்றனர்.

அது போன்ற வேளைகளில் அவர்களை உற்சாகப்படுத்தவும் நம்பிக்கையூட்டவும் தேவன் கொடுக்கும் ஒப்பற்ற வாக்குறுதிதான் *நான் உன்னோடே இருப்பேன்* என்பதாகும்.

இஸ்ரேல் ஜனங்களை எகிப்தின் பார்வோனிடமிருந்து விடுவிக்கும் வேலையை மோசேயிடம் தேவன் ஒப்படைத்தார். ஆனால் மோசே தன் பலவீன நிலையைக் கணக்கிட்டு தன்னால் அது எப்படி சாத்தியமாகும் என்று கலங்கினான். பல லட்சம் மக்களை யோர்தானுக்கு அப்பால் உள்ள கானானுக்கு வழிநடத்தும் சுமையை தேவன் யோசுவாவின் மேல்

வைத்தபோது யோசுவா திகைத்தான். வலிமை வாய்ந்த மீதியானியர்களிடமிருந்து இஸ்ரவேலை இரட்சிக்க கிதியோனை தேவன் தெரிந்து கொண்டபோது அவன் தன் அற்ப நிலையை உணர்ந்து அங்கலாய்த்தான்.

இது போன்ற வேளைகளில் தேவன் அவர்களின் கையில் கொடுத்த வல்லமையான ஆயுதம்தான் *நான் உன்னோடே இருப்பேன்* என்ற வாக்குத்தத்தமாகும் (யாத் 3:12; யோசுவா 1:5; நியா – 6:16;) அந்த வல்லமையான ஆயுதத்தை பெற்ற ஒவ்வொருவரும் தங்களால் கூடாத காரியங்களை மிக எளிதாக செய்து முடித்து வெற்றி பெற்றனர்.

கடக்கக் கூடாத பல சோதனை ஆறுகள் உங்களுக்கு முன்பாக ஓடிக்கொண்டிருக்கலாம். எதிர்க்க இயலாத அளவிற்கு பல பிரச்சனைகள் உங்களுக்கு எதிராக நின்று கொண்டு பயமுறுத்திக் கொண்டிருக்கலாம். தப்பித்து போக முடியாத அளவிற்கு பல இக்கட்டுகள் உங்களை சூழ்ந்து கொண்டிருக்கலாம்.

ஆனாலும் நம்பிக்கையூட்டும் ஒரு செய்தி தேவனிடமிருந்து உங்களுக்கு வருகின்றது. ஆபிரகாம், யோசேப்பு, மோசே, யோசுவா, கிதியோன், தாவீது போன்றோருக்கு தேவன் அளித்த தம்முடைய மாபெரும் வாக்குத்தத்தத்தை இன்று உங்களுக்கும் அவர் தர விருப்பம் உடையவராகவேயிருக்கின்றார். *நான் உன்னோடே இருப்பேன்* என்பதே அந்த வாக்குத்தத்தம்.

யோசேப்பு *நான் உன்னோடே இருப்பேன்* என்ற மாபெரும் வாக்குத் தத்தத்தைப் பெற்றவன். யோசேப்பின் சுகமான வாழ்க்கையின் பாதையில் எதிர்பாராத விதமான கொடிய துன்பங்கள் குறுக்கிட்டது. அப்போது அங்கே கிடைக்கும் ஒரு ஆறுதலான செய்தி என்னவென்றால் *கர்த்தர் யோசேப்போடே இருந்தார்* என்பதாகும். (ஆதி–39:2)

யோசேப்பின் வாழ்க்கையின் துன்பங்கள் தொடர் கதையான போதெல்லாம் *கர்த்தரோ யோசேப்போடே இருந்தார்* என்ற செய்தியும் நமக்கு தொடர்ந்து அறிவிக்கப்படுகின்றது.

யோசேப்போடே தேவன் இருந்தார் என்பதை விட தேவன் அவனோடு இருந்ததால் அவனிடம் என்ன நடந்தது என்பதை அறிவதே நமக்கு தேவையானதாகும். யோசேப்போடே தேவன் இருந்ததால் அல்லது *நான் உன்னோடே இருப்பேன்* என்ற வாக்குத்தத்தம் செயல்பட்டதால் ஏற்பட்ட பிரதிவிளைவுகளை சுருக்கமாக இப்போது தியானிப்போம். அதன் மூலம் நம்மோடு கர்த்தர் இருந்தால் என்ன நடக்கும் என்பதை நாம் கண்டுக் கொள்ளலாம்.

## *பாடுகளை சகிக்கும் பரம ஆற்றல் அளிப்பார்*

யோசேப்போடே கர்த்தர் இருந்தார் என்பதினால் அவன் துன்பங்களுக்கு விதிவிலக்கானவனாக மாறிவிடவில்லை. பாடுகள் சில காலம் அவனுடைய வாழ்க்கையை நெருக்கிக்கொண்டேதான் இருந்தன. ஆனால் அந்த பாடுகளை பொறுமையாக சகிக்கும் ஆற்றல் அவனிடம் செயல்பட்டது. துன்பங்களைக் கண்டு துணிவிழந்து அவன் ஓடிவிடவில்லை. ஆனால் அவைகளை தைரியமாக அவன் சந்தித்தான்.

தன் சொந்த சகோதரர்களால் அவன் தொல்லைகளுக்குட்படுத்தப் பட்டான். உத்தமமாக உழைத்தும் அவன் போத்திபாரின் வீட்டில் அவமானப்படுத்தப்பட்டான். எந்த தவறும் செய்யாதிருந்தும் அவன் கடுமையான சிறை வாசத்தை ஏற்க நேர்ந்தது. ஆனாலும் இவைகள் எல்லாவற்றின் நடுவிலும் அவன் மனஞ்சோர்ந்து போய் தன் உண்மையை விட்டு விலகவில்லை. அவன் நம்பிக்கையிழந்து நல்லது செய்வதை விட்டுவிடவில்லை.

எல்லா சோதனைகளையும், பாடுகளையும், தைரியமாக சகிக்கின்ற வீரம் நிறைந்த பக்குவம் அவனிடம் செயல்பட்டது. ஏனென்றால் கர்த்தர் அவனோடிருந்தார். பாடுகளின் பாதையை துணிவுடன் கடந்து செல்லும் கிருபையை தேவன் அவனுக்குக் கொடுத்திருந்தார்.

நம்மோடு தேவன் இருந்தால் நம்மிடமும் பாடுகளை பக்குவமாக சகிக்கும் கிருபை நிச்சயம் விளங்கும். சிலர் இறை வாழ்க்கைப் பாதையில் பாடுகளைக் காண நேரிடுகின்ற போது, இறை வாழ்க்கையே

வேண்டாம் என்று போய் விடுகின்றனர். சிலர் சோதனைகளை சந்திக்க நேரிடுகின்ற போது, சோர்ந்து போய் தங்களுடைய பழைய வாழ்க்கைக்கே திரும்பி விடுகின்றனர். காரணம் என்ன? கர்த்தர் அவர்களோடு இல்லை. நான் உன்னோடே இருப்பேன் என்ற வாக்குறுதியை அவர்கள் உறுதியாகப் பற்றிக் கொள்ளவில்லை.

பாடுகளை யாருமே விரும்புவதில்லை. ஆனாலும் பாடுகளை வாழ்க்கையில் காணாதவர்கள் யாருமே இல்லை. பாடுகளின் பாதையில் பயணம் செய்ய வேண்டிய கட்டாயம் ஏதாவது ஒரு நிலையில் எல்லோருக்கும் வரவே செய்கின்றது.

பாடுகள் பலவித காரணங்களுக்காக தேவனால் நம்முடைய வாழ்க்கையில் அனுமதிக்கப்படுகின்றது.

*1. சில பாடுகள் தேவன் நம்முடைய வாழ்வில் தேவை என்பதை உணர்த்துவதற்காக வருகின்றன.*

*2. சில பாடுகள் நம்முடைய தவறுகளை நாம் உணர்ந்து கொள்வதற்காக வருகின்றன.*

*3. சில பாடுகள் தேவனோடு நமக்குள்ள உறவை பலப்படுத்துவதற்காக வருகின்றன.*

*4. சில பாடுகள் தேவன் நம்மோடிருப்பதை அதிகமாக நாம் உணர்ந்து உறுதிப்படும்படியாக வருகின்றன.*

*5. சில பாடுகள் நம்மை உயர்ந்த நிலைகளுக்காக தகுதிபடுத்தும்படி வருகின்றன.*

*6. சில பாடுகள் நம்மிடம் தேவன் இருப்பதை பிறர் கண்டு விசுவாசிக்கும் படி வருகின்றன.*

*7. சில பாடுகள் நம்முடைய அற்ப நிலையை நாம் உணர்ந்து என்றும் தாழ்மையுடன் வாழ வேண்டியதின் அவசியத்தை உணர்த்தும் படி வருகின்றன.*

இது போன்ற பல நோக்கங்களுக்காக பாடுகள் நம் வாழ்க்கையில் வரலாம். ஆனால் தேவன் நம்மோடிருந்தால் அந்த பாடுகளை வெற்றியாக கடந்து செல்லும் தேவ வல்லமை நம்மிடம் நிச்சயம் செயல்படும். யோபு, யோசேப்பு, தாவீது, பவுல் போன்ற தேவ மனிதர்களோடு தேவன் இருந்தார். எனவேதான் எத்தகைய துன்பங்களை எதிர்கொள்ள நேர்ந்தும் அவர்கள் வீழ்ச்சியுறாமல் எழுச்சியுடன் எழுந்து நின்று தேவனை மகிமைப் படுத்தினார்கள்.

*நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன். தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர் – தாவீது (சங் 23 : 4)*

*நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப் போகிறதில்லை கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை. துன்பப்படுத்தப்பட்டும் மடிந்து போகிறதில்லை – பவுல் அப்போஸ்தலன் (2 கொரி – 4:8, 9)*

## பாவங்களை மேற்கொள்ளும் பரிசுத்த வல்லமை தருவார்

இரண்டாவதாக யோசேப்போடே தேவன் இருந்ததால் அவன் பாவத்தை மேற்கொள்ளும் மனிதனாக விளங்கினான். அவன் தன் மாம்சீக பலவீனத்தையோ மாறுபட்ட சூழ்நிலைகளையோ சுட்டிக்காட்டி பாவத்தை நியாயப்படுத்த விரும்பவில்லை. போத்திபாரின் மனைவியின் விஷயத்தில் பாவத்திற்கு விலகி நிற்கும் வாய்ப்புகள் மிக மிகக் குறைவாக இருந்த போதிலும் அவன் பாவத்திற்கு விலகி ஓடும் அபார ஆற்றல் உடையவனாக விளங்கினான். பாவம் அவனை மேற்கொள்ளவில்லை. அவன் பாவத்தை மேற்கொண்டான்.

கர்த்தர் நம்மோடிருந்தால் பாவங்களை விலக்கவும், தவறுகளை தவிர்க்கவும் தேவையான தெய்வீக ஆற்றல் நம்மிடம் நிச்சயம் செயல்படும். தேவனோடுள்ள நெருங்கிய ஐக்கியம் மட்டுமே பாவமான செயல்களுக்கும் சுபாவங்களுக்கும் விலக்கி நம்மைக் காக்க முடியும்.

இன்று அநேகர் தங்களை ஆவியை உடையவர்கள் என்றும்

அபிஷேகம் பெற்றவர்கள் என்றும் பெருமையாகச் சொல்வார்கள். ஆனால் வாழ்க்கையிலோ பாவங்களை மேற்கொள்ளும் அனுபவம் இல்லை. ஆகாத செயல்களைவிட்டும் ஆகாத சுபாவங்களை விட்டும் விலகிச் செல்லும் அனுபவம் போதிய அளவிற்கு இல்லை. காரணம் என்ன? கர்த்தர் அவர்களோடு இல்லை. அவர்கள் கர்த்தரோடு இல்லை.

மன இயல்புகள் மாறவில்லை. பொல்லாத சுபாவங்கள் போகவில்லை. பொருளாசை மறையவில்லை. அன்புநிலை அதிகரிக்கவில்லை. பொறுமையும், தாழ்மையும் நிலைக்கவில்லை. மாய்மாலமான பேச்சுகள் நீங்கவில்லை. இப்படியிருக்கையில் ஒருவர் ஆவியைப் பெற்றேன் என்பதும், அபிஷேகம் பெற்றேன் என்பதும் சுத்தப் பொய்தான் என்பதற்கு வேறு ஆதாரங்கள் அவசியமில்லை.

தேவன் ஒருவரோடிருந்தால் அவர் தன்னுடைய தவறான சுபாவங்களையும் குணங்களையும் விடாமல் தொடர முடியாது. பாவமான விஷயங்களை விட்டு விலகாத ஒருவரோடு தேவன் தொடர்ந்து தங்கியிருக்கமாட்டார். யோசேப்பு தேவனோடு நெருக்கமாக இருந்தான். எனவே பாவம் அவனை விட்டு தூரமாகவே இருந்தது. ஆம். தேவ ஐக்கியம் பாவத்தை மேற்கொள்ளவும் தவறான குணங்களை மேற்கொள்ளவும் தேவையான பலத்தை நமக்கு தருகின்றது.

பரிசுத்த ஆவியை தேவன் நமக்குத் தருகின்றார். எதற்காக? வெறுமனே பரவசப்படுவதற்காக அல்ல. நாம் பரிசுத்தப் படுவதற்காகவே. கொஞ்ச நேரம் ஆடிப் பாடி ஆரவாரம் செய்வதற்காக அல்ல .. ஆண்டவருக்கேற்றபடி நாம் நம்முடைய சுபாவநிலையிலும் குணநிலையிலும் வாழ்ந்து அவரை மகிமைப்படுத்துவதற்காகவே. நம்மை பரிசுத்தமான நிலையில் பக்குவப்படுத்தாமல் வெறும் பரவசத்தை மட்டும் தருவது பரிசுத்த ஆவியாக இருக்க முடியாது.

## *வெறுப்பையும் கசப்பையும் விலக்குவார்*

மூன்றாவதாக யோசேப்போடே தேவன் இருந்தபடியால் கள்ள மற்ற, கசப்பற்ற ஒரு மனிதனாக அவன் மாறினான். அவனுடைய இதயத்தில்

பிறரைக் குறித்த வெறுப்பு, விரோதம், பகை, கசப்பு, பழிவாங்கும் சுபாவம் எதுவும் இருக்கவில்லை.

அவனுடைய சொந்த சகோதரர்கள் அவனுக்கு இழைத்த அநீதி கொஞ்சமல்ல. அவர்களால் அவனுக்கு நேரிட்ட இன்னல்கள் கொஞ்சமல்ல. ஆயினும் அவன் அவைகளை மனதில் வைத்து சிந்தித்து அவர்களைக் குறித்து வெறுப்போடும் கசப்போடும் வாழவில்லை. காலம் வரும்போது அவர்களுக்கு தகுந்த பதில் செய்யலாம் என்று அவன் எண்ணிக் கொண்டிருக்கவில்லை. தேவன் அவனோடிருந்ததால் அவருக்கு பிரியமற்ற காரியங்களை அவன் தன்னிடம் வைத்துக் கொள்ளவில்லை அவரோடுள்ள ஐக்கியத்தின் பூரிப்பினால் தன்னை அக்கிரமமாக அல்லல்படுத்திய சகோதரர்களைக்கூட அவன் நேசித்து அவர்களுக்கு உதவிசெய்யும் உபகாரியாக மாறினான்.

ஆம். கர்த்தர் நம்மோடிருந்தால் யாரைக் குறித்த எந்தவித கசப்பும், கோபமும், எரிச்சலும், பழிவாங்கும் உணர்வும் நம்மிடம் இருக்க முடியாது. சவுல் ராஜா கசப்பும், வெறுப்பும், எரிச்சலும் மிகுந்தவன். காரணம் என்ன? கர்த்தர் அவனோடு இருக்கவில்லை. கர்த்தர் அவனை விட்டு விலகியிருந்தார்.

கர்த்தர் நம்மோடிருந்தால் அன்பு, சமாதானம், பொறுமை, தாழ்மை ஆகியவை நம்மிடம் பெருகிக் கொண்டேயிருக்கும். நம்முடைய சமாதானத்தை கெடுக்கும் தன்மை உடைய கசப்பையும் வெறுப்பையும் அவர் இதயத்தை விட்டு விலக்குவார்.

இன்று சபைக்கு சபை விரோதம். விசுவாசிக்கு விசுவாசி கசப்பு. பாஸ்டருக்கு பாஸ்டர் எரிச்சல். ஊழியருக்கு ஊழியர் பொறாமை. இவைகள் எப்படி ஏற்படுகின்றன? அன்பை அஸ்திவாரமாகக் கொள்ள வேண்டிய ஆவிக்குரிய மக்களிடம் பெருமை, கோபம், கோள் சொல்லுதல், பகை உண்டாக்குதல், பழிவாங்கத் துடித்தல் போன்ற பொல்லாத பாவங்கள் எப்படி நிரந்தரமாகி விட்டன? சாத்தானின் சுபாவங்களோடு இவர்கள் ஏன் சங்கமித்துவிட்டார்கள்?

வேறொன்றுமில்லை. யோசேப்போடே இருந்ததேவன் இவர்களோடு இல்லை. தேவனோடு இருக்கின்ற யோசேப்புகளாக இவர்கள் இல்லை. நான் உன்னோடே இருப்பேன் என்ற வாக்குத்தத்தம் இவர்களிடம் செயல்படவில்லை. ஆம் தேவன் நம்மோடிருந்தால் அவர் விரும்புகின்ற நற்சுபாவங்கள்தான் நம்மிடம் இருக்க முடியும். அதுதான் ஆவியானவரின் கிரியை.

## *ஏற்ற காலத்தில் உயர்த்தி கவுரவிப்பார்*

நான்காவதாக யோசேப்போடே தேவன் இருந்தபடியால் ஏற்றகாலத்தில் தேவன் அவனை உயர்த்தினார். அநேகருக்கு முன்பாக அவனை மேன்மைப்படுத்தினார். அவன் கடந்து வந்த பாதையில் காண்பித்த உத்தமத்திற்கு பதிலாக பன்மடங்கு அதிகமாக அவனை கவுரவப்படுத்தினார்.

ஆம். தேவன் நம்மோடிருப்பது உண்மையென்றால் ஒரு நாள் அவரால் நாம் உயர்த்தப்படுவது மிகவும் நிச்சயமாகும். யோசுவா தன்னுடைய வாழ்க்கையில் தேவனுக்கேற்ற உண்மையையும் உத்தமத்தையும் உறுதியாகத் கடைபிடித்தவன். ஒரு நாள் தேவன் அநேகம் இஸ்ரவேலர்களுக்கு நடுவில் அவனை மேன்மைப்படுத்தி உயர்த்தினார். (யோசுவா : 4 : 14)

ஆபிரகாமை தேவன் அழைத்தார். அவனுக்கு அநேகம் ஆசீர்வாத வாக்குறுதிகளைக் கொடுத்தார். அவைகளில் முக்கியமான ஒரு வாக்குறுதி *நான் உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்* என்பதாகும் (ஆதி 12:2) ஆபிரகாமின் வாழ்க்கையில் தேவன் அவனைப் பெருமைப்படுத்திக் காண்பித்தார். அவனை அற்பமாக எண்ணிய அந்த நாட்டு அரசனே ஒரு நாள் ஆபிரகாமைத் தேடிவந்து தன்னைத் தாழ்த்திக் கொள்ள வேண்டிய சூழ்நிலையை தேவன் ஏற்படுத்தினார் (ஆதி 2:22,23)

தேவன் நம்மோடிருக்கும் போதே நாம் கஷ்டங்களின் காலங்களை காண நேரிடலாம். துன்பங்களையும் துயரங்களையும் அடைய நேரிடலாம். பலர் நடுவில் சில வேளை அற்பமாக எண்ணப்பட்டு

அவமதிக்கப் படலாம். அநேகரால் அவமானப்படவும் ஆகாதவர் என்று தள்ளப்படவும் நேரிடலாம்.

ஆனாலும் அவைகளே தொடர்கதையாகி விடுவதில்லை. காலங்களை மாற்றுகின்ற தேவன் அவைகளை கவனிக்காமல் விட்டு விடுவதில்லை. அவர் அதிக காலம் அமைதியாயிருப்பது போலவே தோன்றும். ஆனால் அவருடைய வேளை வரும் போது அங்கே எதிர்பாராத ஆர்ப்பரிப்பு நிச்சயம் ஏற்படும். தாவீதோடே இருந்த தேவன் அவனுடைய போராட்டமான வாழ்க்கைப் பாதையில் அதனைச் செய்து காட்டினார். தேவன் ஒருவனோடிருந்தால் ஒரு நாள் அநேகரை ஆச்சர்யப்படுத்தும் விதத்தில் அவனை உயர்த்தாமல் விடமாட்டார் என்பதை தாவீதின் வாழ்க்கையில் நிரூபித்தார்.

இன்று அநேகம் ஆவிக்குரிய விசுவாசிகள் மற்றும் ஊழியர்களின் வாழ்க்கையில் தேவனால் உயர்த்தப்படும் அல்லது கனப்படுத்தப்படும் அனுபவம் இல்லை. இதற்கு முக்கியமாக இரண்டு காரணங்கள் உண்டு.

*1. தேவனால் உயர்த்தப்படும் நாள்வரை காத்திராமல் தங்களைத் தாங்களே குறுக்கு வழிகளில் உயர்த்திக் கொள்ள பிரயாசப்படுதல்.*

*2. தேவனால் உயர்த்தப்படுவதற்கு தேவையான உண்மையும் உத்தமமும் அர்ப்பணமும் ஆவிக்குரிய வாழ்க்கையில் போதிய அளவு இல்லாமை.*

யோசேப்போடே இருந்த தேவன் அவனை உயர்ந்த ஸ்தானத்தில் உட்காரவைத்து கனப்படுத்தாமல் விடவில்லை. ஏனென்றால் அவன் தன்னைத்தானே உயர்த்திக் கொள்ள ஒரு போதும் முயற்சிக்கவில்லை. அவன் தாழ்ந்த நிலையிலிருந்தும் கூட தேவனுக்கு முன்பாக தன்னுடைய உத்தமத்தில் உறுதியாயிருந்தான்.

யோசேப்பை உயர்த்தி ஆசீர்வதித்த தேவன் நம்மையும் அப்படியே உயர்த்தி கனப்படுத்தவே விரும்புகின்றார். முதலில் நாம் யோசேப்பின் தேவனுக்கு பிரியமாக வாழ்ந்திட முன்வருவோம். அப்போது நிச்சயம் தேவன் நம்மை உயர்த்துவார். ஆமென்.

*ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.* (1பேதுரு 5:6)

# 2 உங்கள் எதிரி யார்?

உங்களுடைய எதிரிகள் யார் என்று கேட்டால் சிலர் தங்களின் முன்னாள் நண்பர்களைக் கூறுவார்கள். சிலர் தங்கள் அலுவலக பணியாளர்களைக் கூறுவார்கள். சிலர் தங்கள் தொழில் துறையில் உள்ளவர்களைக் கூறுவார்கள். நலம் நாடும் நண்பர்கள் சிலர் இல்லாமலிருந்தால் கூட நாசத்தை விரும்பும் விரோதிகள் சிலர் பெரும்பாலும் எல்லாருடைய வாழ்க்கையிலும் இருப்பார்கள்.

ஆனால் எல்லா எதிர்ப்புகளுக்கும் விரோதங்களுக்கும் வெறுப்பு களுக்கும் பின்னணியில் ஒரு முக்கிய நபர் உண்டு. அவன்தான் பிசாசு அல்லது சாத்தான். மனிதர்களின் பிரதான எதிரியும் விரோதியும் இந்த சாத்தான்தான். உண்மையில் நம்முடைய சத்துரு நமக்கு எதிராக வரும் மனிதர்கள் அல்ல. இந்த சாத்தான் அல்லது பிசாசானவன் தான் நம்முடைய மோசமான சத்துரு. எய்தவனை விட்டு விட்டு அம்பை நொந்துக் கொள்வது போல, பெரும்பாலும் சாத்தானை விட்டு விட்டு, நாம் மனிதர்களைத்தான் நொந்துக் கொள்கின்றோம்.

ஆதியாகமம் துவங்கி, வெளிப்படுத்தின விசேஷம் வரை, மனுக் குலத்திற்கு எதிராக தொடர்ந்து சோர்வின்றி இயங்கும் சாத்தானை வேதாகமத்தில் மிகத் தெளிவாகக் காண முடிகிறது. இந்த சாத்தானுடைய செயல்கள் ஏராளமாயிருந்தாலும், நோக்கம் ஒன்றே ஒன்றுதான். தேவனுடைய ஆசீர்வாதங்களை அனுபவிக்கவிடாமல் மனிதனை எவ்விதத்திலாகிலும் தடுக்க வேண்டும். இது ஒன்றே அவனுடைய நோக்கம்.

இந்த செயல்பாடுகளை புரிந்து கொண்டு அவனை எதிர்ப்பதற்கும் நம்மை நாசமாக்கி விடாதபடி அவனை துரத்துவதற்கும் விழிப்புடனும்,

தீவிரத்துடனும் நாம் இருக்க வேண்டியது அவசியம். இதனை வேதாகமம் பல இடங்களில் வற்புறுத்துகின்றது. (எபே – 6:11 – 18; யாக் – 4:7; 1 பேதுரு – 5:8,9)

தேவனுடைய ஆசீர்வாதங்களை நாம் பெறவிடாமல் தடுக்கவும். தேவனுடைய ஆசீர்வாதங்களிலிருந்து நம்மை கீழே தள்ளி விடவும், ஓயாமல் முயன்று கொண்டிருக்கின்ற சாத்தானுக்கெதிராக நாம் மிகுந்த கவனத்துடன் செயல்படாவிடில், வேதனைகளே மிஞ்சும்.

## சாத்தானின் தோற்றங்களைப் புரிந்துகொள்ளுங்கள்

சாத்தானை நாம் எதிர்க்கவும், துரத்தவும் வேண்டுமானால் முதலாவது அவனுடைய வடிவத்தை நாம் அறிந்திருக்க வேண்டுமே. பலர் நினைக்கின்றபடி பெரிய கொம்புகளை வைத்து கொண்டும், கோரமான பற்களை நீட்டிக்கொண்டும், கறுத்த உருவத்துடனும் சாத்தான் வரமாட்டான். அந்த வடிவத்தில் வந்தால் எதிர்ப்பது ஒரு வேளை இலகுவாக இருக்கும். அவனுடைய உருவம் எப்படியிருக்கும் என்பது யாருக்கும் தெரியாது.

அவன் குறிப்பிட்ட ஒரு வடிவத்தில் வரமாட்டான். அவன் தந்திரவாதி. அவன் ஏராளமான ரூபங்களிலும், தோற்றங்களிலும் வருவான். அந்த உருவங்களை நாம் சரியாக நிதானிக்க இயலாமல் போகும் போதுதான் அவனுடைய தந்திரங்கள் நம்மிடம் நிறைவேறி நாசமான விளைவுகள் ஏற்படுகின்றன.

சாத்தானின் ரூபமும், அவனுடைய செயல்களின் தோற்றங்களும் எண்ணிலடங்காதவை. அவைகளில் நம்முடைய பிரயோஜனத்திற்காக ஒரு சிலவற்றைக் குறித்து இப்போது பார்ப்போம்.

ஆதியாகமம் 3–ம் அத்தியாயத்தில் முதல் முறையாக சாத்தானின் வரவை நாம் காண்கின்றோம். அங்கே அவன் சர்ப்பத்தின் வடிவத்தில் வருகிறான். (ஆதி. 3:11) அங்கே அவனுடைய நோக்கம் என்ன? தேவனால் சகல ஆசீர்வாதங்களுக்கு நடுவில் வைக்கப்பட்ட ஆதாம் ஏவாள் தம்பதியினரை வஞ்சிக்க வேண்டும். தேவனுடைய ஆசீர்வாதப் பகுதியிலிருந்து அவர்கள் துரத்தப்படுவதற்கு எதையாவது செய்ய

வேண்டும். சுருங்கக்கூறின் ஆதாமும், அவன் மூலம் மனுக்குலமும், தேவசமுக மேன்மைகளை இழந்து போக வேண்டும்.

இந்த நோக்கத்தை நிறைவேற்ற அவன் என்ன செய்தான்? வாலை ஆட்டிக்கொண்டு, கொம்பைக்காட்டி மிரட்டிக்கொண்டு, கோரமான நீண்ட பற்களால் பயமுறுத்திக் கொண்டு, பயங்கரமாக சண்டை போட்டானா? இல்லை. மிகவும் சாதுரியமாக வந்தான். நல்ல ஒரு நண்பனைப்போல அவர்களிடம் வந்தான். அவர்கள் மேல் அக்கறை மிகுந்தவன் போல தன்னைக் காட்டினான். எப்படியாவது அவர்களை மிக உயர்ந்த ஸ்தானத்தில் வைத்து பார்க்க ஆசைப்பட்டவனைப் போல கனிவாகப் பேசினான். சுருக்கமாகக் கூறினால் மிகச் சிறந்த ஒரு ஆலோசனைக்காரன் போல வந்தான்.

அவனுடைய ஆலோசனையில் மயங்கிய ஏவாள் தேவ ஆலோசனையை புறம்பே வீசினாள். அவனுடைய கனிவான, கவர்ச்சியான வார்த்தையை நம்பிய ஏவாள், கர்த்தரின் வார்த்தையின் மேல் நம்பிக்கையிழந்து, அதனைப் புறக்கணித்தாள். முடிவு சாத்தானின் நோக்கம் நிறைவேறியது. ஆசீர்வாதத்திலிருந்து அப்புறப் படுத்தப்படுவதற்கு அவர்களே காரணமாகிப் போனார்கள்.

சாத்தானின் தோற்றம் புரிகிறதா? அருவருப்பான தோற்றம் அல்ல. அழகானத் தோற்றம். அவனுடைய செயலின் வடிவத்தைப் பார்த்தீர்களா? பயங்கரத் தோற்றமல்ல. மிகுந்த பக்குவமான பரவசமானத் தோற்றம். முடிவோ பரிதாபம்.

## நண்பர்களின் ஆலோசனை யாவும் நல்லவைகளா?

நம்முடைய விரோதிகளை எப்போதும் எதிரிகளின் வரிசையிலேயே பார்க்கிறோம். ஆனால் அவர்கள் நம்முடைய ஆதரவாளர்களின் வரிசையிலும் இருக்க முடியும். எந்த நண்பனுக்குப் பின்னால் பிசாசானவன் நிற்கின்றான் என்று யாருக்குத் தெரியும்?

எதிரிகளின் சதிகள்தான் நம்மை கவிழ்க்க வருகின்றன என்று நாம் எண்ணக் கூடாது. நம்முடைய நண்பர்களின் நலமானத் தோற்றங் கொண்ட ஆலோசனைகள் கூட நம்மை கவிழ்க்க காரணமாகலாம்.

நாம் நாசமாக வேண்டும் என்று கங்கணம் கட்டும் எதிரிகளால் மட்டுமல்ல. நாம் நன்றாயிருக்க வேண்டும் என்று நம்முடைய நண்பர்கள் சிலர் அக்கறையுடன் கூறுகின்ற யோசனைகளால் கூட நமக்கு பெரிய பாதிப்புகள் ஏற்பட முடியும்.

சாலோமோன் ராஜாவின் மகனாகிய ரெகொபெயாமின் ஆட்சி காலத்தில் இது போன்ற ஒரு நிகழ்ச்சி நடந்தது. இஸ்ரவேல் ஜனங்கள் அவனிடம் வந்து ஒரு வேண்டுகோளை அவனுக்கு முன்பாக வைத்தனர். அந்த வேண்டுகோள் சம்பந்தமாக அவன் தேவபக்தியுடைய, முதியோர்களிடம் ஆலோசனை கேட்டான். அவர்கள் நலமான ஒரு ஆலோசனையைக் கொடுத்தனர் **(1 இராஜா 12 : 6,7).**

ஆயினும் ரெகொபெயாம் அதனை உடனே ஏற்றுக் கொள்ளாமல், தன்னுடைய நெருங்கிய நண்பர்கள் குழுவிடம் ஆலோசனைக் கேட்டான். அவர்கள் தவறான ஒரு ஆலோசனையைக் கொடுத்தனர். ரெகொபெயாம் முதியோர்களின் நல்ல ஆலோசனையைப் புறக்கணித்து, தன்னுடைய ஆத்ம சினேகிதர்களின் ஆலோசனையை ஏற்றுக் கொண்டான். இதனால் ஜனங்கள் கலகம் செய்தனர். அதன் விளைவாக தாவீதால் கட்டி எழுப்பப்பட்ட இஸ்ரவேல் சாம்ராஜ்யம் இரண்டாக உடைந்தது.

இங்கே சாத்தான் எப்படி வந்து செயல்பட்டான்? ரெகொபெயாமின் மேல் அக்கறை கொண்ட நண்பர்களின் வழியாக. ரெகொபெயாமுக்கு கைகொடுப்பது போன்ற மாயத்தோற்றமுடைய தவறான ஆலோசனை வழியாக. "சிலுவையின் பாடுகள் உமக்கு வேண்டாம்" என்று பேதுரு இயேசுவுக்கு கொடுத்த ஆலோசனை அன்பின் விளைவுதான். ஆயினும் அது தேவனுக்கேற்ற ஆலோசனை அல்ல. அந்த ஆலோசனையின் பின்னணியில் சாத்தானின் சாயலை இயேசு கண்டார். எனவே தான் *"அப்பாலே போ சாத்தானே"* என்று பேதுருவை இயேசு கடிந்து கொண்டார். **மத் – 16 : 23.**

## ஆலோசனைகளை ஆராய்ந்து பார்த்தல் அவசியம்

நம்முடைய நலத்தை நாடும் நண்பர்கள் வழியாகக் கூட பிசாசானவன் மாம்சீக ஆலோசனைகளைக் கொடுத்து, தேவ

ஆசீர்வாதங்களுக்கு நம்மை தூரமாக்க முடியும். எனவே யார் வழி காட்டினாலும் சரி, ஆலோசனை சொன்னாலும் சரி, அவைகள் தேவனுக்கேற்றவைகள் தானா என்று ஆராய்ந்து பார்த்தல் அவசியம். இல்லையேல் சாத்தான் தன்னுடைய தந்திரமான வழிகளினால் நம்மை விழவைத்து விடுவான்.

நான் எந்த ஊழியமும் இல்லாமல் மிகுந்த கஷ்டங்களுக்கு நடுவில் முழு நேரத்தையும் ஜெபத்திலும், வேத தியானங்களிலும் கழித்த காலங்கள் உண்டு. அந்த நாட்களில் என்னை பசியும், பட்டினியும், இல்லாமையும் அதிகமாக பாதித்ததுண்டு. அந்த விசனமான வேளைகளில் என்மேல் அக்கறை கொண்ட சிலர் "நீ வேலை ஏதாவது செய்யலாமே. படித்திருக்கிறாய் அல்லவா .. ஏன் இப்படி கஷ்டப்படுகிறாய்" என்று சொல்லி ஏதாவது வேலை செய்ய என்னை அதிகமாகத் தூண்டியதுண்டு. ஒரு புறம் என்னுடைய கஷ்ட நிலையில் அது நலமான யோசனை போலத்தோன்றினாலும், மறுபுறம் தேவ சமுகத்தில் அதற்கான அனுமதியின் அடையாளம் கொஞ்சம் கூட கிடைக்கவில்லை. எனவே அந்த யோசனைகளை நான் ஏற்கவில்லை. ஒரு வேளை அவைகளை நான் அன்று ஏற்றுக் கொண்டிருந்தால் நான் ஒரு மேன்மையான ஊழியத்தையே இழந்திருப்பேன்.

ஆம், நம்முடைய நலத்திற்காகத்தானே சொல்கிறார்கள் என்று நம்பத்தக்கதான சில ஆலோசனைகளின் பின்னாலும் சாத்தான் நிற்க முடியும். அங்கே தெளிந்த புத்தியுடன் செயல்பட்டு சாத்தானை எதிர்க்காவிட்டால் தேவனுடைய வழிகளுக்கு நாம் புறம்பாக போக நேரிட்டு அவருடைய ஆசீர்வாதங்களை இழக்கும் நிலை வரலாம்.

இஸ்ரவேல் ராஜாவாகிய யெரெபெயாமின் ஆட்சி காலத்தில், யூதாவிலிருந்து வந்த தீர்க்கத்தரிசி வெற்றிகரமான ஒரு தீர்க்கத்தரிசன ஊழியத்தை நிறைவேற்றினான். ஆனால் கொஞ்ச நேரத்திலேயே பரிதாபமாக சிங்கத்தினால் கொல்லப்பட்டான். காரணம் என்ன? தேவன் சொன்ன வார்த்தையை விட்டு அவன் வழி விலகினான். ஏன் வழிவிலகினான்? ஒரு தவறான ஆலோசனை. கொடுத்தது யார்? பொல்லாதவனோ, போக்கிரியோ அல்ல. ஒரு தேவ

ஊழியன் அவன். தேவன் சொன்னபடி நடப்பதில் உறுதியாக நில்லாமல், தேவன் இப்படி சொல்கிறார் என்று சொன்ன ஒரு தீர்க்கத்தரிசியின் தவறான வழிகாட்டுதலால் அவன் மதியீனமாக மடிந்தான். பார்த்தீர்களா? ஒரு நல்ல ஊழியனை அழிக்க சாத்தான் யார் வழியாக எப்படி வந்தான் என்பதை.

ஆம், யார் எதைச் சொன்னாலும் அது சாத்தானின் ஆலோசனையா, அல்லது தேவ ஆலோசனையா என்பதை பகுத்தறியும் பக்குவம் நமக்கு வேண்டும். பகுத்தறியும் பக்குவம் எப்படி வரும்? **1–ம்** சங்கீதம் விடைதருகிறது.

அங்கே துன்மார்க்கரின் (தேவனை அறியாதவர்களின்) ஆலோசனையில் நடவாதே என்று சொல்லப்பட்டதோடு, தேவனுடைய வேதத்தை இரவும், பகலும் தியானிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆம் தேவன் தந்த வேதத்தை ஆர்வத்தோடும் அனுதினமும் தியானிக்க கவனமாயிருந்தால், ஆலோசனைகளின் பின்னால் நிற்பது சாத்தானா அல்லது தேவனா என்பதைக் கண்டறியும் ஞானம் கிடைக்கும்.

## ஆடம்பர ஆசை யாருடையத் தோற்றம்?

இரண்டாவதாக, ஆடம்பர ஆர்வங்களின் பின்னணியில் பிசாசானவனுடைய செயல்பாடுகள் அதிகமாக உள்ளன. ஆடம்பரமாக அல்லது சுகபோகமாக வாழ வேண்டும் என்ற ஆசை பிசாசானவனுடைய ஒரு கவர்ச்சியான தோற்றமாகும். ஆடம்பர பிரியமும், அதனைத் தொடர்ந்த செயல்களும் ஒரு மனிதனை தேவனை விட்டு வெகுதூரம் போகவைக்கும் சக்தி கொண்டவை.

வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகள் கிடைத்தால் போதும் என எண்ணுகின்ற மனிதன், அவைகள் கிடைத்ததும், கொஞ்சம் வசதியான வாழ்க்கை கிடைத்தால் நலமாயிருக்கும் என எண்ணுகின்றான். அந்த எண்ணமும் நிறைவேறிவிட்டால், அடுத்ததாக பகட்டாகவும், படோடாபமாகவும் வாழ ஆசைப்படுகிறான். அந்த பகட்டான படோடாபமான ஒரு வாழ்க்கை தேவன் தனக்கு தேவையில்லை என்ற நிலையை அவனுக்கு தந்துவிடுகிறது.

இன்று வசதியாக வாழ வேண்டும், ஆடம்பரமாக வாழ வேண்டும் என்ற ஆசைகள் பெரும்பான்மையான மக்களை ஆட்டிப்படைக்கின்றன. எல்லோருடைய கவனத்தையும் ஈர்க்க வேண்டும், பலர் நடுவில் மேட்டுக் குடியினர் போலத்தோன்றி மரியாதை பெற வேண்டும் என்ற ஆசைகள் ஆவிக்குரிய மக்களையும் தேவ பணியாளர்களையும் கூட இன்று அலசடிப்படுத்துகின்றன. ஏனென்றால் அவைகளுக்கு பின்னால் சாத்தான் நிற்கின்றான். இந்த உலகத்தின் மகிமை யாவும் உமக்குத் தருகிறேன் என்று கூறி இயேசுவை மயக்க முயற்சித்த சாத்தான் இன்று ஏராளமான மக்களை மயக்கி தன் வலையில் விழ வைத்துக் கொண்டிருக்கிறான்.

இந்த மாயவலையை விரித்து விட்டு மறைவில் நிற்கும் சாத்தானை நாம் அடையாளம் கண்டு அவனுக்கு எதிராக ஒரு போராட்டத்தை போராட வேண்டியது மிகவும் அவசியமாயிருக்கிறது. அதாவது ஆடம்பரமான, அதிக சுகமான வாழ்க்கை வாஞ்சைகளையும், ஆசைகளையும் நம்மில் வளரவிடாமல் அவைகளுக்கு எதிராகப் போய் அவைகளை அப்புறப்படுத்தும் ஆக்கப்பூர்வமான பிரயாசம் வேண்டும்.

இன்று சாத்தானுடைய தந்திரங்களின் உச்சகட்ட செயல்பாடுகளை எங்கும் காண முடிகின்றது. ஆடம்பரமான ஒரு வாழ்க்கைக்கு இன்று ஆசீர்வாதமான வாழ்க்கை என்ற பெயர் கிடைத்திருக்கிறது. பொருளாதார ஆசீர்வாதங்களை மையப்படுத்தி செய்யப்படும் ஊழியங்கள் யாவும் சாத்தானுடைய நோக்கங்கள் நிறைவேறவே வழிவகுக்கின்றன. பணம், பொருள், நிலம் செல்வம் என்று ஏராளமாக பெற்று சுகபோக ஜீவிகளாக வாழ அழைக்கும் ஊழியங்களின் பின்னால் தேவன் அல்ல, சாத்தானே செயல்படுகின்றான். ஏனென்றால் வேதம் எளிமையான, தாழ்மையான ஆடம்பரமற்ற அமைதியான ஒரு வாழ்க்கையையே ஆதரிக்கிறது.

பணம், பொருள், வீடு வசதி ஆகியவை நமக்கு அவசியமே. ஆயினும் அவைகள் அளவுகளைத் தாண்டும் போது, நம்மை தேவனுக்கு உகந்த நிலையிலிருந்து அவை தள்ளி விடுகிறது. பொருளாதார உயர்வுகளை மையமாகக் கொண்ட ஒரு மாயையான வாழ்க்கைக்கு நம்மை அழைத்துச் சென்று விடுகிறது.

சாலோமோனுடைய வாழ்க்கை ஆடம்பரங்களாலும், அதிக வசதிகளாலும் நிறைந்திருந்தது. அவனுக்கு அளவற்ற செல்வங்கள் இருந்தபடியால் விரும்பியபடியெல்லாம் வாழ்வதற்கு அவனுக்கு வாய்ப்பு இருந்தது. அவன் வெள்ளியையும், பொன்னையும் வெளிநாட்டுப் பொருட்களையும் வாங்கிக் குவித்தான். ஆசைப்பட்ட அனைத்தையும் அடைந்து விடுவதுதான் ஆண்டவரின் ஆசீர்வாதம் போல அனைவரின் கண்களுக்கும் தோன்றிய அவனுடைய ஆடம்பர வாழ்வு நிலை உண்மையில் பெரிய சாபமாகவே இருந்தது. ஆடம்பர பிரியம் தேவனை விட்டு அவனை வெகுதூரம் போக வைத்தது. படோடாபமான ஒரு வாழ்க்கை அவனுடைய பரிசுத்த வாழ்க்கையை பரிபூரணமாக கறைப்படுத்தியது.

## அதிக ஆசைகளை அப்புறப்படுத்துவோம்

இன்னும் கொஞ்சம் பணம் சேர்ந்தால் – இன்னும் கொஞ்சம் நிலங்கள் வாங்கினால் – இன்னும் கொஞ்சம் நகைகள் செய்தால் இன்னும் சில வீடுகளைக் கட்டினால் இன்னும் கொஞ்சம் வசதியை பெருக்கினால் – நன்றாயிருக்குமே என்ற எண்ணங்கள் வரும்போது, அந்த எண்ணங்களை கொண்டு வருகின்றவன் பிசாசனவன் என்பதை மறக்க வேண்டாம். அந்த எண்ணங்களுக்கு சில தடைக்கற்களைப் போடாவிடில் அந்த எண்ணங்கள் நம்முடைய வாழ்க்கையை அர்த்தமற்ற தாக்கிவிடும்.

எல்லா ஆசைகளும் நமக்கு நியாயமாகவேத் தோன்றும். எல்லா பொருட்களும் நமக்கு தேவையானவை போலவேத் தெரியும். ஆனாலும் எல்லா ஆசைகளும் நியாயமானவைகள் அல்ல. எல்லா பொருட்களும் நமக்கு தவிர்க்க முடியாத தேவைகள் அல்ல. வசதி பெருக, பெருக அல்லது வசதிகளைக் குறித்த ஆர்வங்கள் பெருக, பெருக விசுவாசம் வலுவிழக்கும். தேவ சார்பு நிலை தேய்ந்து கொண்டு போகும். பரிசுத்த நிலை பலமிழக்கும். நித்தியத்தை நோக்கிய பார்வை ஒளியிழக்கும். தேவ நியாயங்களை விட்டு நம்மை நிலை தவற வைக்கும். சாத்தானின் நோக்கம் அங்கே நிறைவேறும்.

*போதுமென்கிற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம் என்றும் உண்ணவும், உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்* என்றும் வேதம் நமக்கு தெளிந்த ஆலோசனைத் தருகின்றன. (1 தீமோ – 6:6,8)

பிறருடைய வசதியான வாழ்க்கைகள் ஆடம்பரமான தோற்றங்கள், சுகபோகமான சூழ்நிலைகள் ஆகியவற்றைக் காணும் போது மனித உள்ளத்தில் சில சலசலப்புகள் ஏற்படுவது உண்டு. "நாமும் இந்த நிலையை அடைய வேண்டும். நமக்கும் இதுபோன்ற ஒரு வசதியான வாழ்க்கை அமைய வேண்டும்" என்ற ஆசைகளும் தாகங்களும் பேரளவில் வருவதுண்டு. ஆனாலும் அவைகள் வெறும் ஆசைகள் அல்ல. அவைகள் நம்மை நாசமாக்க விரும்பும் சாத்தானின் வஞ்சகமான தோற்றங்களே.

ஆம். பணம், பொருள், வீடு, வசதி என்று ஏராளம் ஆசைகள் தோன்றும் போது, அவைகள் சாத்தானின் சதிவலைகள் என்பதை புரிந்து கொண்டு அந்த ஆசைகளை எதிர்க்க உஷாராயிருப்போம். ஆடம்பர ஆசைகளுக்கு அடிமையாகி தேவ ஐக்கியங்களை இழந்து வாழ்க்கையை வீணாக்காதிருக்க விழித்திருப்போம்.

ஆம். கர்த்தரை விட்டு நேரடியாகவோ, மறைமுகமாகவோ நம்மை விலக்கும் தன்மையுள்ள எந்த ஒரு காரியத்தின் பின்னாலும் சாத்தான் இருக்கின்றான் என்பதை உணர்ந்து அவனுக்கு எதிர்த்து நிற்க தயாராயிருப்போம். அப்போது தேவன் நம்முடைய அனைத்து தேவைகளுக்கும் போதுமானவராயிருந்து, அனைத்து நன்மைகளினாலும் நம்மை ஆசீர்வதிப்பார்.

*பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்.* (யாக் 4:7)

# 3 தேவனுடைய வாக்குறுதிகள் எப்போது நிறைவேறும்?

நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய நன்மைகளையும், கிருபைகளையும் பெற்று ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக விளங்க வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம். நம்மை பல நிலைகளில் தேவன் ஆசீர்வதிக்க விரும்புவதைக் குறித்த ஏராளமான தேவ வாக்குறுதிகள் வேதாகமத்தில் உண்டு.

தேவனுடைய ஆசீர்வாத வாக்குறுதிகளைக் குறித்த ஒரு விழிப்புணர்வு இன்று மக்களிடம் முன்பை விட அதிகமாக உள்ளதைக் காண முடிகிறது. தேவனுடைய எண்ணிடலங்கா நன்மைகளைக் குறித்த ஆசீர்வாத வாக்குறுதிகளை நாம் உரிமை பாராட்டி பெற வேண்டும் என்ற ஆர்வம் மக்களிடம் அதிகரித்துள்ளது.

தேவனுடைய ஆசீர்வாத வாக்குறுதிகள் தங்கள் வாழ்க்கையில் நிறைவேறும்படியாக அதிகமாக ஜெபிக்கின்ற, உபவாசிக்கின்ற மக்கள் அனேகர். ஆயினும் வாக்குறுதிகள் தங்கள் வாழ்க்கையில் நிறைவேறுவதைக் கண்டு களிகூரும் மக்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர். தேவனுடைய வாக்குறுதிகளைக் குறித்த அறிவும், விசுவாசமும், எதிர்பார்ப்பும் மக்கள் மத்தியில் பெருகிய போதிலும் அவைகள் அனேகர் வாழ்க்கையில் நிறைவேறாமல் போவது வேதனையானதே.

## இதற்கு முக்கிய காரணம் என்ன ?

எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் தாம் கொடுத்த வாக்குறுதிகளை நம்முடைய வாழ்க்கையில் நிறைவேற்றி நம்மை ஆசீர்வதிக்காமல் போவதன் காரணம் என்ன? (எபி:6:17,18: தீத்து–1:3) சுருக்கமாக கூறினால் வாக்குறுதிகளைக் குறித்த அறிவும் உரிமை பாராட்டலும் அதிகரித்த போதிலும் அவைகள் நிறைவேறுவதற்கு நாம் செய்ய வேண்டியது என்ன என்பதை சரியாக அறியாமல் இருப்பதே அதன் காரணமாகும்.

## அவருடைய வசனத்தின் படி வாழ வேண்டும்

எகிப்திலிருந்து கானானை நோக்கி சென்று கொண்டிருந்த இஸ்ரவேல் மக்களுக்கு தேவன் ஏராளமான ஆசீர்வாத வாக்குறுதிகளை கொடுத்தார். இதனை உபாகமம் அத்தியாயத்தில் தெளிவாகக் காண்கிறோம். ஆயினும் அவைகளின் நிறைவேறுதல் தானாக நடந்துவிடுவதில்லை. அந்த மக்கள் தேவன் அவர்களுக்கு விதித்த கட்டளைகளை கவனமாக கடைபிடிக்க வேண்டும். தேவனுடைய சத்தத்திற்கு உண்மையாக செவிகொடுத்து வாழ வேண்டும். அப்பொழுதுதான் தேவன் அளித்த வாக்குறுதிகள் நிறைவேறும். (உபா–28:1,2)

தேவன் நம்முடைய வாழ்க்கையில் தம்முடைய ஆசீர்வாத வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமானால் அவருடன் நாமும் ஒத்துழைக்க வேண்டும். அவருடைய வார்த்தைகளுக்கு கீழ்படிந்து வாழ்வதே நாம் கொடுக்க வேண்டிய ஒத்துழைப்பு ஆகும்.

கட்டளைகளை கடைபிடித்தலும், வார்த்தைகளுக்கேற்ப வாழ்தலும், அவருடைய ஆசீர்வாதங்களுக்காக நாம் கொடுக்க வேண்டிய விலையல்ல. அப்படி வாழ்ந்தால்தான் அவர் தம்முடைய ஆசீர்வாத வாக்குறுதிகளை நம்மிடம் நிறைவேற்றுவதற்கு வழிகிடைக்கும். ராஜா நமக்கு நன்மைகளை அளிக்க வருகின்றார். ஆனால் அவர் நம்மிடம்

வருவதற்கான வழியை நாம் தான் அமைத்துக் கொடுக்க வேண்டும். (ஏசாயா– 40:3) அவருடைய வசனங்களுக்கேற்ப வாழ பிரயாசப்படுதலே அவர் நம்மிடம் வருவதற்காக நாம் அமைக்க வேண்டிய வழியாகும்.

வாக்குறுதிகளை உரிமை பாராட்டினாலும் அதிகமாக உபவாசித்து ஜெபித்தாலும், தேவனுடைய வேத வசனங்களை வாழ்க்கையில் கடைபிடித்து வாழாவிட்டால் அவருடைய ஆசீர்வாத வாக்குறுதிகள் நம்மிடம் நிறைவேற முடியாது. ஆம். தேவனுடைய வேத வசனங்கள் வாசிக்கவும் கேட்கவும் மட்டும் அல்ல. அவைகள் கடைபிடிப்பதற்காகவே (வெளி–1:3) அதனுடைய விளைவாக நிறைவேறுவதே ஆசீர்வாத வாக்குறுதிகள்.

## அவருடைய வழிகளை ஏற்கவேண்டும்

எகிப்தின் அடிமைத்தன வாழ்வினால் வருத்தமடைந்த ஆபிரகாமின் சந்ததியினருக்கு தேவன் பல ஆசீர்வாத வாக்குறுதிகளை அளித்திருந்தார். தேனும் பாலும் ஓடுகின்ற தேசம் என்று கூறத்தக்க அளவிலான செழிப்பான கானான் நாட்டினை தேவன் அவர்களுக்கு அளிப்பதாக வாக்குரைத்தார். ஆனாலும் அதனை பெறுவதற்காக எகிப்தை விட்டு கிளம்பிய இஸ்ரவேல் மக்கள் அதனை அடையாமல் வனாந்திரத்திலேயே வாழ்வை முடித்துக் கொண்டனர். தேவனுடைய மாறாத வாக்குறுதிகள் அவர்களின் வாழ்க்கையில் நிறைவேறவில்லை.

காரணம் என்ன? அவர்கள் தேவனுடைய வாக்குறுதிகளை விசுவாசித்தார்கள். அதனை அடைவதற்காக புறப்பட்டார்கள். ஆயினும் அதற்காக அவர் விதித்த வழியை அவர்கள் மனதார ஏற்றுக் கொள்ளவில்லை. செழிப்பான நாட்டை வனாந்திரம் வழியாக நடந்து தான் சேர வேண்டும் என்ற தேவ ஆலோசனையை அவர்கள் விரும்பவில்லை. ஆசீர்வாதங்களை அடைவதற்கு முன் சில சோதனைகள், குறைவுகள், தடைகள், எதிர்ப்புகள், கஷ்டங்கள் ஆகியவற்றை கடக்க வேண்டும் என்ற தேவனுடைய கொள்கையோடு

அவர்கள் ஒத்துப்போகவில்லை. அவர்கள் ஆசீர்வாத வாக்குறுதிகளை அதிகமாக விரும்பினாலும் அதற்கேற்ற தேவ வழி நடத்துதலை அவர்கள் ஏற்காமல் முரண்டு பிடித்தார்கள்.

தேவனுடைய ஆசீர்வாத வாக்குறுதிகள் நம்முடைய வாழ்க்கையில் நிறைவேறுவதற்கு நம்முடைய விசுவாசமும் விடாப்பிடியான ஜெபங்களும் துணை புரியும். ஆயினும் அவைகளோடு தேவன் நடத்தும் பாதைகளில் நடந்து, அவருடைய வழி நடத்துதல்களை அப்படியே ஏற்றுக் கொண்டால்தான் நம்முடைய வாஞ்சைகள் நிறைவேறும்.

## பாடுகள் வழியாகத்தான் ஆசீர்வாத அனுபவங்கள்.

சோதனைகளை சகித்து – நிந்தைகளை ஏற்று – சிரமங்களை தாங்கி பாடுகளில் பங்கு கொண்டு – பரிசுத்த வாழ்வில் பக்குவமடைந்தால் தான் தேவனுடைய உயர்ந்த ஆசீர்வாத வாக்குறுதிகளுக்கு நாம் தகுதியாக முடியும். இன்று நாம் தேவனுடைய வழிகளில் முழுமனதோடு நடக்கின்றோமா? அவருடைய ஆலோசனைகளுக்கு நாம் உட்பட்டு வாழ்கிறோமா? வாக்குறுதிகளைக் குறித்த அறிவோடும் ஆர்வத்தோடும் இவைகளும் சேர்ந்தால்தான் நாம் ஆசீர்வாதங்கள் நிறைவேறுவதைக் காண முடியும்.

## அவருடைய ஊழியத்தில் இருக்க வேண்டும்

யோசுவா 1-ம் அத்தியாயத்தில் பரவசமூட்டும் பல தேவ வாக்குறுதிகளைக் காண்கிறோம். கலங்காதே திகையாதே – நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை என்பது போன்ற பல நம்பிக்கையூட்டும் வாக்குறுதிகளை அங்கே காண்கிறோம். இது போன்ற ஆறுதலான பல வாக்குறுதிகளை இன்று கிறிஸ்தவ மக்கள் அதிகமாக பேசவும், உரிமை பாராட்டவும் செய்கின்றனர்.

ஆயினும் இவைகள் ஏராளமானோர் வாழ்க்கையில் கொஞ்சம் கூட நிறைவேறவேயில்லை. காரணம்என்ன? அத்தகைய வாக்குறுதிகளை

தேவன் யாருக்கு கொடுக்கின்றார்? எப்போது அவைகளைக் கொடுக்கின்றார்? என்பதை அறிந்து செயல்படாமையே ஆகும். யோசுவாவுக்கு தேவன் "கலங்காதே திகையாதே நான் உன்னோடிருப்பேன்". என்றெல்லாம் வாக்குறுதிகளைக் கொடுத்தார். ஏனென்றால் அவன் தன்னை தேவனுக்கு ஒப்புக்கொடுத்து அவருடைய ஊழியத்தை நிறைவேற்றுவது சம்மந்தமாக சிந்தித்துக் கொண்டிருந்தான்.

ஆம், தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற நம்மை ஒப்பு கொடுத்து அவருடைய ஊழியத்தில் நம்மை ஏதாவது ஒரு விதத்தில் உட்படுத்தும் போது அவர் நம்மை கலங்காமலும் திகையாலும் காக்கின்ற பொறுப்பை எடுத்துக் கொள்கின்றார். இந்த பூமியில் நமக்காகவே நாம் வாழாமல் தேவனுடைய ஊழியத்தை நிறைவேற்றும் விதமாக நாம் வாழ்ந்தால் நம்மை விட்டு அவர் விலகமாட்டார். நம்மை கைவிடவும்மாட்டார்.

ஆம், மேலே சொன்னது போன்ற வாக்குத்தத்தங்கள் தேவனுக்கு ஊழியம் செய்வதை பிரதானமாகக் கொண்ட மக்கள் வாழ்க்கையில் நிறைவேறுகின்றவைகளாகும். ஊழியம் என்பதால் எல்லாரும் மிஷனரியாகவோ போதராகவோ போய்விட வேண்டும் என்று அர்த்தமல்ல. குறைந்த பட்சம் தேவனுடைய வழிகளில் நடந்து அவருக்கேற்ற சுபாவங்களாலும் குணாதிசயங்களாலும், சாட்சியாக வாழ்வது ஊழியம் தான். தேவனுக்கு பிரியமாக வாழ வேண்டும் என்ற சிந்தனையோடும் ஆர்வத்தோடும் செயல்படுவதும் ஊழியம்தான்.

தேவனுக்கு பிரியமாக வாழ்தல், கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழ்தல், கிறிஸ்துவின் மகிமை விளங்கும்படி வாழ்தல் ஆகிய நிலைகளுக்கு போதிய முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அப்போதுதான் கர்த்தர் நம்முடைய கலக்கத்தையும், திகைப்பையும் நீக்க வருவார். அப்போது தான் தேவன் எப்போதும் நம்மோடிருப்பதையும், நம்மை கைவிடாமல் காப்பதையும் அனுபவப் பூர்வமாகக் கண்டு களிகூரமுடியும்.

மோசே, கிதியோன், எப்தா போன்ற பல வேதாகம மனிதர்கள் "நான் உன்னோடிருப்பேன்" என்ற மாபெரும் வாக்குறுதியை பெற்றவர்கள். வாக்குறுதியை பெற்றதோடு அவைகள் தங்கள் வாழ்க்கையில்

நிறைவேறவும் கண்டவர்கள். அவர்கள் தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்ற விரும்பி, அவருடைய காரியமாக புறப்பட்டுப் போனார்கள். எனவே அந்த காரியங்களின் நடுவில் தேவன் தங்களோடிருப்பதையும், அவருடைய வல்லமை தங்களுக்கு ஆதரவாக இருப்பதையும் கண்டார்கள்.

நான் உன்னோடிருப்பேன் என்பது தேவப்பிரசன்னம் நம்மோருப்பதைக் குறிக்கும் வாக்குறுதியாகும். நாம் ஒவ்வொருவரும் இந்த வாக்குறுதி நம்மிடம் நிறைவேறுவதைக் காண முடியும். எப்போது? நாம் அவருடைய காரியமாக செல்லும் போது. நாம் அவருடைய காரியங்களையே சிந்தித்து கொண்டிருக்கும் போது. நாம் அவருக்கு பிரியமானவைகளையே செய்து கொண்டிருக்கும் போது. இயேசு எப்போதும் பிதாவாகிய தேவன் தம்மோடிருப்பதை உணர்ந்து கொண்டேயிருந்தார். அவர் தாம் தனிமைப்படுத்தப்பட்டது போன்று எப்போதுமே எண்ணி வருந்தியதில்லை. ஏனென்றால் எப்போதும் அவர் தேவனுக்கு பிரியமானவைகளை செய்து கொண்டேயிருந்தார்.

*என்னை அனுப்பினவர் என்னுடனே கூட இருக்கிறார். பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிற படியால் அவர் என்னை தனியேயிருக்க விடவில்லை.* யோவான் – 8:29.

பலருக்கு தேவப்பிரசன்னம் அல்லது தேவன் என்னோடிருக்கிறார் என்ற உணர்வும், நம்பிக்கையும் ஞாயிறு ஆராதனை வேளைகளிலும், விசேஷ ஆவிக்குரிய கூடுகைகளிலுமே வருகிறது. ஆனால் இது ஒரு தப்பான நம்பிக்கையாகும். தேவன் ஆராதனை வேளைகளில் மட்டுமல்ல. அனைத்து வேளைகளிலும் நம்மோடிருக்க விரும்புகிறார். ஒவ்வொரு நாளும் தேவனுக்கு பிரியமாக வாழவும் செயல்படவும் நாம் தவறினால் அவருடைய பிரசன்னத்தை நாம் உணர்ந்து உற்சாகமடைய முடியாது. தேவனுக்கு பிரியமாக வாழ்வதைக் குறித்தும் அவருக்கு பிரியமானவைகளை செய்வதைத் குறித்தும் நாம் சிந்திக்கவும் செயல்படவும் செய்தால் தேவபிரசன்னம் எப்போதும் நம்மோடிருப்பதை உணர முடியும்.

4

# கர்த்தருக்கு பிரியமானது இன்னதென்று

காயின் ஆபேல் இருவரும் ஆதாமின் பிள்ளைகள். இருவரும் தேவன் ஒருவர் உண்டு என்ற உண்மையை அறிந்தவர்கள். தேவனுக்கு காணிக்கை செலுத்தி அவருக்கு தங்கள் பக்தியை தெரியப்படுத்த வேண்டியது அவசியம் என்பதை அறிந்தவர்கள்.

ஒரு நாள் இரண்டு பேரும் தேவனுக்குக் காணிக்கை செலுத்தி வழிபடச் சென்றார்கள். காயின் தன்னுடைய விவசாயத் தொழிலின் மூலம் பெற்ற விளைபலன்களில் கொஞ்சத்தைக் கொண்டு சென்றான். ஆபேல் ஆடுகளை மேய்க்கின்றவனாகையால், சில ஆடுகளைக் கொண்டு சென்றான். (ஆதி – 4:3,4)

இருவரும் தாங்கள் கொண்டு வந்த காணிக்கைகளைப் படைத்தபோது, காயினையும், அவனுடைய காணிக்கையையும் கர்த்தர் புறக்கணித்தார். ஆனால் ஆபேலையும் அவனுடைய காணிக்கையையும் தேவன் அங்கீகரித்தார். (ஆதி – 4:4,5)

தேவன் ஏன் ஒருவனை அங்கீகரித்து, இன்னொருவனைப் புறக்கணித்தார்? தேவன் ஏன் காயின் படைத்த காணிக்கையை புறக்கணித்து, ஆபேலின் காணிக்கையை மட்டும் ஏற்றுக் கொண்டார்? ஆதியாகமம் 4–ம் அத்தியாயம், 1 முதல் 8 வரை உள்ள வசனங்களை நன்கு தியானிக்கும் போது அதற்குரிய பதில் கிடைக்கின்றது.

காயினின் காணிக்கையை கர்த்தர் அங்கீகரிக்கவில்லை. அவனுடைய வழிபாட்டை அவர் விரும்பவில்லை. அவனுடைய பக்திக்கு எந்த மரியாதையும் கிடைக்கவில்லை. இதற்கு முக்கியமான இரண்டு காரணங்களை இப்போது காண்போம்.

## தேவனுக்கென்று விசேஷிக்கவில்லை

காயின் தேவன் ஒருவர் உண்டு என்று நம்பினான். அவருக்கு தன்னுடைய பக்தியை வெளிப்படுத்தவும் விரும்பினான். ஆனால் அவன் தேவன் எப்படிப்பட்டவர் என்பதை அறியாதவன். தேவனுக்கு பிரியமானது இன்னது என்பதைத் தெரியாதவன். தேவனுக்கு செய்யும் வழிபாடு எத்தன்மையதாக இருக்கவேண்டும் என்பதைக் குறித்து சிந்திக்காதவன்.

அவனுடைய வாழ்க்கையில் தேவனைத் தேடும் அனுபவம் இருந்தது. ஆயினும் தேவனுக்கு முதலிடம் கொடுக்கும் அனுபவம் அவனுக்கிருக்க வில்லை. தேவனுக்கு அவனுடைய வாழ்க்கையில் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அவன் காணிக்கை செலுத்தியவிதம் அதனை தெளிவுபடுத்துகின்றது.

அவனுக்கும், ஆபேலுக்கும் இடையில் ஒரு முக்கிய வேறுபாடு இருந்தது. காயின் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாக கொண்டு வந்தான் என்று வேதம் சொல்கிறது. ஆனால் முதல் தரமான கனிகளைக் கொண்டு வந்தான் என்றோ, மிகவும் சிறப்பான நல்ல கனிகளை தேர்ந்தெடுத்துக் கொண்டு வந்தான் என்றோ சொல்லப்படவில்லை. ஆம். அவன் கர்த்தருக்கென்று எதையும் தேர்வு செய்து படைக்கவில்லை. ஏதோ சில கனிகளை காணிக்கையாக கொண்டு வந்தான். அவ்வளவுதான்.

ஆனால் ஆபேல் அப்படியல்ல. அவன் ஏதோ சில ஆடுகளை காணிக்கையாகக் கொண்டு வரவில்லை. அவன் முதல் தரமான மந்தையின் தலையீற்றுகளில் மிகவும் கொழுமையானவைகளை

தேர்ந்தெடுத்துக் கொண்டு வந்தான். (ஆதி – 4:4) அவன் தனக்கு உள்ளவைகளில் கர்த்தருக்கென்று மிகவும் சிறப்பானவைகளை விசேஷித்துக் கொண்டான். தேவனுடைய மகத்துவத்தையும், மகிமையையும் உணர்ந்து அதற்கேற்ப மிகவும் மேன்மையானவைகளை அவருக்கென்று கொண்டு வந்தான். கர்த்தருக்கென்று தேர்வு செய்து செயல்பட்டு மிக மேன்மையானதை காணிக்கையாக படைத்ததன் மூலம் அவன் தேவனுக்கு மிக உயர்வான ஓர்இடத்தைக் கொடுப்பவன் என்பதை நிரூபித்தான். எனவேதான் தேவன் அவனையும் அவனுடைய வழிபாட்டையும் அங்கீகரித்தார்.

இறைவாழ்க்கை என்பது வாழ்க்கையில் ஏதோ ஒரு இடத்தை கொடுப்பதல்ல. முதலிடம் கொடுப்பதாகும். ஏதோ சில வழிகளில் பக்தியைக் காண்பிப்பதல்ல. அவருக்கு முதல் முக்கியத்துவம் கொடுத்து, அவருக்கென்று வாழ்க்கையை விசேஷித்துக் கொள்வதாகும்.

கர்த்தருக்கு முதல் முக்கியத்துவம் கொடுப்பது என்றால் என்ன? கர்த்தருக்கேற்ற பிரகாரம், வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளுக்கும், பரிசுத்த ஒழுங்குகளுக்குமேற்ப வேலை, தொழில், பிறரோடுள்ள தொடர்புகள் போன்றவற்றை தேர்வு செய்து கொள்ள வேண்டும். கர்த்தர் விரும்பும் பரிசுத்தம், நற்குணம் போன்றவை வாழ்க்கையில் காணப்படுவதற்கு தடையாக வருகின்ற எதையும் வேண்டாம் என்று தள்ளிவிட வேண்டும்.

தேவனுக்கு வாழ்க்கையில் முதலிடம் கொடுக்கின்றோம் என்று நாம் நினைக்கவும், சொல்லவும் செய்யலாம். ஆனால் அவருடைய ஆலோசனைகளைத் தேடாமல் நம்முடைய சொந்த ஆலோசனைகளைச் சார்ந்து நிற்கும் போது தேவனை நாம் முக்கியப்படுத்தவில்லை என்பது தெளிவாகும். அவர் விரும்புகின்ற பிரகாரமாக உயர்ந்த நல்ல சுபாவங்களை நாம் வெளிப்படுத்தாமல்

போகும் போது அவருக்கு முதலிடம் கொடுக்கவில்லை என்பது நிரூபணம் ஆகும். தேவனுடைய காரியங்களைவிட நம்முடைய வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட காரியங்களே நமக்கு மிக முக்கியமானவை ஆகிவிடும்போது தேவன் நம் வாழ்க்கையில் மிக முக்கியமாகக் கருதப்படவில்லை என்பது தெளிவாகும்.

தேவனை முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும் அன்பு கூருவதுதான் உண்மையான தொழுகை ஆகும். (உபா – 6:5) தேவனுக்கு முழு அன்பை செலுத்தும் போது, அவரே நம் வாழ்க்கையின் மையமும் நோக்கமுமாக இருப்பார். அப்பொழுது நம்முடைய வாழ்க்கை தேவனுடைய விருப்பத்தை நிறைவேற்றவே என்ற நிலை உருவாகிவிடும். அவ்வித மேன்மையான தொழுகையைக் கொண்ட வாழ்க்கைதான் தேவனால் அங்கீகரிக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்படும் வாழ்க்கையாகும்.

## செவ்வையில்லாத இதயநிலை

இரண்டாவதாக காயினின் காணிக்கை தேவனால் புறக்கணிக்கப்பட்டதின் முக்கிய காரணம் அவனுடைய செவ்வையற்ற இதய நிலையாகும். தேவன் ஒரு மனிதனுடைய வெளிப்புறச் செயல்களையல்ல,அவனுடைய உட்புற தோற்றத்தை உற்று நோக்குகின்றவர். வெளிப்புறச் செயல்கள் எவ்வளவு பக்திக்குரிய நிறத்தைக் கொண்டிருந்தாலும் உட்புற இதயநிலை தேவனுக்கேற்றதாக இல்லாமல் போனால் அந்த மனிதனுடைய தொழுகையையோ, காணிக்கையையோ தேவன் ஏற்றுக் கொள்வதில்லை.

காயினின் கையில் இருந்த காணிக்கையை தேவன் விரும்பவில்லை. ஏனென்றால் அவனுடைய இதயத்திலிருந்தவைகள் தேவனுடைய வெறுப்புக்குரியவைகள். அவனுடைய இதயத்தில் பாவம் இருந்தது. (ஆதி – 4:7) தன்னுடைய சகோதரனைக் குறித்த பொறாமையும் வெறுப்பும், கசப்பும் அங்கேயிருந்தன. தன்னுடைய

காணிக்கை புறக்கணிக்கப்பட்ட ஆத்திரத்தில், தன் சகோதரனாகிய ஆபேலை கொன்றுவிட்ட செயல் மூலம் அவன் பொல்லாப்பு நிறைந்த இதயமுடையவன் என்பது நன்கு தெரிகின்றது.

அப்படிப்பட்ட செம்மையற்ற மனதுடன் அவன் படைத்த காணிக்கையும், அவன் காண்பித்த தேவபக்தியும் தேவனால் புறக்கணிக்கப்பட்டன. தன் சகோதரனை வெறுத்துக் கொண்டே தேவனைப் பிரியப்படுத்த அவன் செய்த முயற்சி தோல்வியடைந்தது.

நம்முடைய இதயத்தை தேவன் விரும்பிய பிரகாரம் வைத்துக் கொள்ளாத நிலையில், நம்முடைய அனைத்து ஆவிக்குரிய செயல்களும், பக்தி பிரயாசங்களும், வீணானவை ஆகும். சபை கூடுகைகளில் நாம் தவறாமல் கலந்து கொள்ளலாம். ஆலயம் சம்பந்தமான காரியங்களில் அதிக ஈடுபாடு கொண்டு சிரமப்படலாம். ஊழியக் காரியங்களுக்கு உற்சாகமாக காணிக்கை கொடுக்கலாம். பரவசமாக பாடல் பாடி, பல நூறு துதிகளையும் ஸ்தோத்திரங்களையும் ஏறெடுக்கலாம்.

ஆயினும் இவைகள் மட்டும் தேவனுடைய அங்கீகாரத்தையும், ஆசீர்வாதத்தையும் நமக்கு கொண்டு வந்துவிடாது. நம்முடைய இதய நிலைகளை நாம் நன்கு கவனிக்க வேண்டும். அங்கே பிறரைக் குறித்த கசப்பு, வெறுப்பு, பொறாமை ஆகியவை எந்த வடிவத்தில் இருந்தாலும், அவை முதலில் அகற்றப்படவேண்டும். ஏனென்றால் நாம் தேவனுக்காக எதைச் செய்கிறோம், எப்படிச் செய்கிறோம், என்பதையல்ல. முதலாவது அவருக்கு முன்பாக நாம் உள்ளான நிலையில் எப்படி இருக்கிறோம் என்பதையே தேவன் பார்க்கின்றார்.

அநேகமான ஆவிக்குரிய மக்கள் தங்கள் ஆன்மீகச் சாயல் உள்ள பலவித செயல்கள் தங்களுக்கு தேவாசீர்வாதங்களைக் கொண்டு வந்து விடும் என்று நம்புகின்றனர். ஆனால் இதயத்தை செவ்வையாக வைக்க வேண்டியதின் தேவையை உணராமல் போகின்றார்கள். அவர்கள் தங்கள் இயல்புகள், சுபாவங்கள் குணங்கள் போன்றவை

வேதத்திற்கேற்ப இருக்கிறதா என்று பார்க்கும் விழிப்பற்றவர்களாக இருக்கிறார்கள். எனவேதான் அவர்களின் பலவித ஆவிக்குரிய செயல்களுக்கு தேவனிடமிருந்து உரிய ஆசீர்வாதங்கள் வராமல் போகின்றது.

நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும் என்று இயேசு சொன்னார். நம்மிடத்தில் நாம் அன்பாயிருப்பது போல, பிறரிடத்திலும் அன்பாயிருக்க வேண்டும் என்பதே தேவனுடைய முக்கிய கட்டளை என்று அவர் சுட்டிக்காட்டினார். ஆம். மற்றவர்கள் விஷயத்தில் நாம் கபடற்றவர்களாகவும், வெறுப்புணர்வு இல்லாதவர்களாகவும், மாயமற்ற நல்ல எண்ணங்களை உடையவர்களாகவும் இருக்க வேண்டும். கர்த்தர் நம்மையும், நம்முடைய ஆராதனைகளையும் காணிக்கைகளையும் அங்கீகரித்து ஆசீர்வதிக்க வேண்டுமானால் மேற்கண்ட காரியங்களில் நாம் குறைவில்லாமல் இருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

காயின் இந்த விஷயத்தில் குறைவுபட்டான். எனவே தேவன் அவனையும் அவனுடைய ஆன்மீக செயல்களையும் புறக்கணித்தார். ஆம், கர்த்தருக்கு பிரியமானது இன்னதென்று நாம் சோதித்துப் பார்க்க வேண்டியது அவசியம். நாம் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து செயல்பட வேண்டியது மிகவும் தேவை (எபேசியர் – 5 : 10,17) வெளிப்புற செயல்களைவிட உட்புற இதய நிலைக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்போம். அப்பொழுது நம்முடைய தொழுகை தேவனுடைய அங்கீகரிப்பிற்கும், ஆசீர்வாதத்திற்கும் தகுதியுடையதாக மாறும்.

5

# பணம்... பணம்... பணம்...

★ பணம் கொஞ்சமாயிருக்கையில் அது ஒருவனுடைய கட்டுப்பாட்டிற்குள் இருந்து அவனை வாழ வைக்கும். அது பெருகி விட்டாலோ, கொஞ்சம் கொஞ்சமாக அவனை அது தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து ஏதாவது ஒரு விதத்தில் அவனை விழ வைக்கும்.

★ பணம் பெருத்தவனை உலகம் முதலாளி என்று அழைக்கிறது. உற்று நோக்கினால், பணம்தான் அவனுடைய முதலாளியாக இருப்பது தெரிய வரும்.

★ பணம் ஒருவனிடத்தில் அதிகமாயிருந்தால், பலர் அவனுக்கு முன்பாக கை கட்டி நிற்கின்றனர். ஆனால் உண்மையில் அவர்கள் அவனுக்கு அல்ல, அவனுடைய பணத்திற்கு முன்பாகத்தான் கை கட்டி நிற்கின்றனர்.

★ உணவிற்கு உப்பு தேவை. ஆனால் அது அளவைத்தாண்டும் போது உணவை நாசமாக்குகிறது. பணம் வாழ்க்கைக்கு தேவை தான். ஆனால் அது அதிகமாகும் போது அவனுடைய வாழ்க்கையை நாசமாக்குகிறது.

★ பெண்ணாசையில் விழுந்து விட்டவன் என்றாவது ஒரு நாள் மீள வாய்ப்புண்டு. பண ஆசையில் விழுந்தவன் மீண்டும் எழுவது மிகவும் அபூர்வம்.

★ பணம் பெருகப்பெருக, ஆசை நிறைவேறிவிட்டதற்காக மகிழ்வதை விட, ஆசைகள் பெருகுவதாலேயே அவன் அதிகமாக சங்கடப்படுகிறான்.

★ பணமும் குணமும் தங்களுக்குள் நல்ல நண்பர்களல்ல. அவைகள் பெரும்பாலும் உறவின்றி விலகியே இருக்கும்.

★ பணம் மனிதனுக்கு மிகுந்த நம்பிக்கையை தருகின்ற ஒரு சக்தி தான். ஆனால் அந்த நம்பிக்கைத்தான் அவனை அழிக்கும் சக்தியாக மாறிவிடுகிறது.

★ பண ஆசை எலிசாவின் சீடனாகிய கேயாசியை குஷ்டரோகியாக்கி பாளையத்துக்கு புறம்பே போக வைத்தது. பண ஆசை இயேசுவின் சீடனாகிய யூதாஸை நான்று கொண்டு சாக வைத்தது. பண ஆசை அனனியா – சப்பீராள் தம்பதியை பரிதாப சாவுக்குள் தள்ளியது.

**பண ஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக் கொண்டிருக்கிறார்கள் (1 தீமோ – 6:10)**

# 6 வெற்றியின் நான்கு படிகள்

எருசலேமைச் சேர்ந்த பக்தி வைராக்கியமுள்ள யூதன் நெகேமியா. எருசலேம் வீழ்ச்சியடைந்ததின் விளைவாக சிறைக்கைதியாக பாபிலோன் கொண்டு வரப்பட்டான். ஆனாலும் பரவாயில்லை, அங்கே அவனுக்கு நல்ல வேலை கிடைத்தது. பாபிலோன் அரண்மனையில் ஆடம்பர சூழ்நிலையில் அவனுக்கு எந்தக் குறையும் இல்லை.

ஆயினும் அவன் தனக்குள் சுகமாகயில்லை. அவனுடைய இதயமோ தன்னுடைய தேவனுடைய நகரமாகிய எருசலேமைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருந்தது. இடிந்து கிடக்கும் எருசலேமின் மதிற்சுவர்களைக் குறித்த நினைவுகள் அவனை முட்களாகக் குத்திக் கொண்டிருந்தன. ஒரு நாள் அவனுடைய ஆர்வத்திற்கு அரசனின் அங்கீகாரம் கிடைத்தது. அவனுடைய கனவு நனவாகும் காலம் வந்தது.

பாபிலோனை விட்டு அவன் எருசலேமுக்குப் புறப்பட்டுச் சென்றான். தன்னுடைய நீண்ட விருப்பத்தை நிறைவேற்றினான். இடிந்து கிடந்த எருசலேமின் அலங்கத்தைச் சீரமைக்கும் பணியில் வெற்றி பெற்றான். அந்த மாபெரும் சாதனைக்கு இந்தத் தனிப்பட்ட மனிதனிடம் காணப்பட்ட சில விசேஷ அனுபவங்கள் முக்கிய காரணமாக அமைந்தன. அவைகளை இப்போது சுருக்கமாக தியானிப்போம். அவன் வெற்றி கண்டது போல, நாமும் ஆவிக்குரிய வாழ்க்கையிலும், உடல் பிரகார வாழ்க்கையிலும் வெற்றி பெற அவைகள் உதவியாக அமையும்.

## நெகேமியா ஒரு ஆவிக்குரிய மனிதன் !

நெகேமியா கண்ட மாபெரும் வெற்றிக்கு முக்கியமான காரணம் *"அவன் ஒரு ஆவிக்குரிய மனிதன்"* என்பது தான். அவன் அந்நிய நாட்டு அரண்மனையில் ஆடம்பரமும், களியாட்டுகளும் நிறைந்த சூழ்நிலைகளுக்கு நடுவில் வாழ்ந்த போதிலும் அவனுடைய உள்ளம் பரிசுத்தமான நினைவுகளினால் நிறைந்திருந்தது. ஏனென்றால் அவன் உண்மையான ஒரு ஆவிக்குரிய மனிதன்.

தேவனோடு தொடர்புடைய காரியங்களில் அவனுடைய மனம் பதிந்திருந்தது. தேவனுடைய காரியங்கள் அவனுடைய நோக்கமாய் இருந்தது. தேவனுக்கேற்ற விஷயங்கள்தான் அவனுடைய அனுதின வாஞ்சையாக இருந்தது. அவன் பாவமிகு பாபிலோனில் உடலளவில் உலாவினாலும், அவனுடைய உள்ளமோ பரிசுத்தத்திற்குரிய எருசலேமிலேயே உலாவிக் கொண்டிருந்தது. ஏனென்றால் அவன் உட்பிரகாரமான நிலையில் ஓர் உண்மையான ஆவிக்குரிய மனிதன்.

தேவன் நமக்கு வெற்றிகளைத் தரவே விரும்புகின்றார். நாம் சாதனையாளர்களாக நிற்க வேண்டும் என்பது தேவவிருப்பம். நாம் ஆவிக்குரிய வாழ்க்கையில் அல்லது பாவத்திற்கும் உலகத்திற்கும் எதிரான நிலையில் வெற்றி பெற வேண்டும். அதற்கு முதல் தேவை நாம் ஆவிக்குரிய மனிதர்களாக விளங்கவேண்டும் என்பதே.

ஆவிக்குரிய மனிதன் என்பது வெறும் பெயரில் அல்ல. அது நம்முடைய இயல்பிலும், செயலிலும் விளங்க வேண்டும். நாம் சபை கூடுகைகளில் கலந்து கொள்ளலாம். ஆடல் பாடல்களோடு ஆண்டவரை ஆர்ப்பரித்துத் துதிக்கலாம். அதிகமான காணிக்கைகளை அள்ளி வழங்கலாம். ஆண்டவரைப் பற்றி அநேகருக்குச் சொல்லலாம். ஆயினும் இவைகள் நாம் ஆவிக்குரியவர்களாக இருக்கிறோம் என்பதற்கான உண்மையான அடையாளங்களல்ல.

உள்ளான நிலையில் நாம் ஆவிக்குரிய சிந்தையுடையவர்களாக, ஆவிக்கேற்ற நோக்கமுடையவர்களாக, ஆவிக்கிசைந்த அணுகு முறையுடையவர்களாக, ஆவியினால் உருவாகும் தெய்வீக வாஞ்சையுடையவர்களாக விளங்குகின்றோமா? இதுவே முக்கியம். இவ்விதமான ஓர் உயர்நிலையான அனுபவத்தை பெறுவதற்காகவே இயேசு கிறிஸ்துவின் மூலம் மறுபடியும் பிறத்தலின் அனுபவம் நமக்குத் தரப்படுகிறது. அந்த மறுபடியும் பிறத்தல் என்ற தெய்வீக அனுபவம் வாழ்க்கையில் புறம்பாக ஒரு சிலமாற்றங்களை மட்டுமல்ல. அக நிலையிலும் அபரிதமான மாற்றங்களை உருவாக்குகின்றன.

முதலாவதாக நாம் ஆவிக்குரியவர்கள்தானா என்பதை நிர்ணயிப்பது நம்முடைய சிந்தனை வாழ்க்கையாகும். நம்முடைய சிந்தனைகள் எத்தன்மையது? நம்முடைய மனம் தேவனுக்குரியவைகளை சிந்திப்பதில் அதிகமாக ஈடுபடுகிறதா? நம்முடைய உள்ளத்தை அதிகமாக நிறைத்திருப்பது உலக சம்பந்த காரியங்களா? அல்லது தேவனோடு சம்பந்தப்பட்ட காரியங்களா? மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக் குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். ஆவியின் படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். ***மாம்ச சிந்தை மரணம் ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்*** (ரோமர் – 8:5–6)

நெகேமியா அடிப்படையில் ஓர் ஆவிக்குரிய மனிதன். அவனுடைய எண்ணம், நினைவு, சிந்தனை, நோக்கம், வாஞ்சை, யோசனை யாவும் ஆவிக்கேற்ற சாயலையுடையதாக இருந்தது. எனவே அந்த உறுதியான அஸ்திபாரத்தின் மேல் நின்று அவன் மாபெரும் வெற்றியினை சாதித்தான்.

நாம் வேறுபட்ட வித்தியாசமான உறுதிமிக்க ஓர் ஆவிக்குரிய அடித்தளத்தை அமைத்த பின்னர்தான் ஆவிக்குரிய வாழ்க்கையில் பெரிய வெற்றிகளை பெற முடியும். அதற்கு நாம் எங்கே இருக்கிறோம் என்பது முக்கியமல்ல. நாம் இதய நிலையில் எப்படியிருக்க விரும்புகிறோம் என்பதே முக்கியம்.

யூதாஸ் இயேசுவோடுதான் இருந்தான். ஆவிக்குரிய சூழ்நிலையில் தான் உலாவினான். ஆனாலும் அவன் ஒரு ஆவிக்குரிய மனிதன் அல்ல. அவன் மாம்சத்திற்குரியவன். அவன் இதய நிலையில் உலகத்தோடு பிணைந்திருந்தான். எனவே பண ஆசை அவனை பாழ்படுத்தியது. எலிசா என்ற வல்லமையான உண்மை மிகு தீர்க்கதரிசியோடு வாழ்ந்தவன்தான் கேயாசி. ஆயினும் அவன் ஆவிக்குரியவனாக இராமல், மாம்சத்திற்குரியவனாகயிருந்தான். பொருளாசை அவனைக் கட்டி வைத்திருந்தது.

ஆனால் யோசேப்பை பாருங்கள். தானியேலைப் பாருங்கள். பாவச் சூழ்நிலைகளில் பலகாலம் வாழ்ந்தவர்கள். ஆயினும் அவர்கள் பாவத்திற்கு உரியவர்களாகவோ, உலகத்திற்கு உரியவர்களாகவோ இருக்கவில்லை. அவர்கள் அங்கே ஆவிக்குரிய மனிதர்களாக வாழ்ந்து சாதனை படைத்தார்கள். ஆம். நம்முடைய இதயம் இயேசுவோடு இணைந்திருந்தால் நாம் எங்கிருந்தாலும் ஆவிக்குரியவர்களாகவே இருப்போம்.

## நெகெமியா ஒரு ஜெபிக்கிற மனிதன் !

நெகேமியாவின் புத்தகத்தில் அவனுடைய அநேகம் செயல்களின் நடுவில் "பளிச்" சென்று தெரிவது அவனுடைய வலிமையான ஜெப அனுபவமே. அவன் அடித்தளத்தில் ஆவிக்குரிய மனிதனாகயிருந்ததால், அதற்கேற்றபடி ஜெபிக்கின்ற மனிதனாகவும் விளங்க முடிந்தது. ஆவிக்குரிய மனிதன் என்பதை விளங்கப்பண்ணும் முக்கியமான ஒரு அடையாளம் ஜெபிக்கின்ற அனுபவமாகும்.

என் தேவனுடைய நகரமாகிய எருசலேம் மதிலிடிந்து போன பட்டணமாக மாறிவிட்டதே என்று அவன் அங்கலாய்த்தான். இடிந்து கிடக்கும் எருசலேமின் மதில்களை மீண்டும் கட்டி எழுப்ப வேண்டும் என்று அவன் தாகங் கொண்டான். ஆனால் அவன் ஆர்வப்படுகிறவனாகவும், வாஞ்சை கொள்கின்றவனாகவும் மட்டும் இருக்கவில்லை. அந்த வாஞ்சை நிறைவேறுவதற்கேதுவாக,

தொடர்ந்து அவன் ஜெபத்தில் தன்னை ஈடுபடுத்துகிறவனாக விளங்கினான். (நெகெமியா – 1: 4 –11) ஏனென்றால் *பலத்தினாலும், பராக்கிரமத்தினாலுமல்ல. தேவனுடைய* ஆவியினால் மட்டுமே தன்னுடைய ஆர்வம் நிறைவேற முடியும் என்பதை அவன் அறிந்திருந்தான்.

ஆவிக்குரிய வாழ்க்கையில் நமக்கு ஆர்வங்களும், விருப்பங்களும், தாகங்களும் மட்டும் போதாது. அவைகளை நாமே முடிவு செய்து நம்மைக் கொண்டே சாதித்து விட முடியாது. தேவன் அங்கே தலையிட வேண்டும். தேவன் அங்கே துணைக்கு வரவேண்டும். ஆனால் ஜெபிக்கின்ற மனிதனின் வாழ்க்கையில் மட்டுமே அவர் தலையிடுகின்றார். அவனுடைய வாழ்க்கையில் மட்டுமே அவனுடைய ஆர்வங்கள் நிறைவேற அவர் துணை நிற்கின்றார்.

ஏராளமான ஆவிக்குரிய மக்களின் வாழ்க்கையில் ஆவிக்குரிய வளமில்லை. ஆவிக்குரிய க்னிகள் என்னும் நற்குணங்களும் இல்லை. ஆவிக்குரிய வாழ்க்கை அங்கே மங்கி எரிகின்ற திரியாக உள்ளது. ஏனென்றால் அங்கே போதிய அளவிற்கு ஜெபிக்கும் அனுபவங்கள் இல்லை.

ஜெபம் நம்முடைய தேவைகளை தேவனுக்கு தெரிவிக்கின்ற ஒன்று மட்டுமல்ல. தேவனுடைய வல்லமையை வாழ்க்கையில் வந்து சேரச் செய்கின்ற வழியே ஜெபம் தான். அந்த வல்லமை வருவதற்கான வழிக்கு போதிய அளவு கவனம் செலுத்தவில்லையேல் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை மதிலிடிந்து போன நிலையிலேயே இருக்கும். அங்கே சாத்தான் உள்ளே பிரவேசித்து ஊறுவிளைவிக்க எந்த தடையுமிராது.

ஆம். ஜெபவலிமை இல்லாத ஆவிக்குரிய வாழ்க்கை ஒரு போதும் நிமிர்ந்து நிற்காது. ஜெப வலிமையில்லாத ஊழியம் உப்பு சப்பற்ற உபயோகமற்ற ஊழியமாகவேயிருக்கும். ஜெபத்தை நாம் அதிகமாக சார்ந்திராவிட்டால், ஜெயத்துடன் நாம் சேர்ந்திருக்க முடியாது.

## நெகேமியா ஒரு செயல்படுகிற மனிதன் !

ஆவிக்குரிய மனிதன் ஜெபிக்கின்ற மனிதனாக இருப்பான். ஜெபிக்கின்ற மனிதன் செயல்படுகின்ற மனிதனாக இருப்பான். ஏனென்றால் ஜெபிக்கின்ற மனிதன் பெரிய வெற்றிகளுக்கு நேராக செயல்பட தூண்டப்படுகின்றான். ஜெபிக்கின்ற மனிதனை தேவன் செயல்படுவதற்கேதுவாக உந்துகின்றார்.

நெகேமியா அறையை சார்த்திக்கொண்டு ஜெபிக்கின்றவனாக மட்டுமல்ல. அறைக்கு வெளியே போய் செயல்படுகின்றவனாகவும் இருந்தான். ஜெபம் செயல்களால் பின்தொடரப்படாவிட்டால் பிரயோஜனமில்லை. நெகேமியா ஜெபித்தான். அதனைத் தொடர்ந்து செயல்பட ஆரம்பித்தான். ராஜாவோடு அவன் பேசினான். (நெகே – 2:3 – 8) எருசலேமுக்கு போக அனுமதி கேட்டான். இவைகள் எளிதான காரியங்கள் அல்ல. ஆனால் ஜெபவலிமையின் விளைவாக அவைகள் எளிதாக கைக்கூடி வந்தன. அதனைத் தொடர்ந்து எருசலேம் சென்றான். எதிர்ப்புகளின் நடுவிலும் செயல்பட்டு நோக்கத்தை நிறைவேற்றினான்.

அநேகரிடத்தில் ஜெப அனுபவம் இருந்த போதிலும், செயல்படும் அனுபவம் இல்லை. அவர்களின் ஜெபம் செயல்களோடு இணைவதில்லை. எனவே ஜெபத்தினால் போதிய பிரயோஜனமில்லை. நாம் செயல்பட முன்வராத வரை ஜெபத்தின் வலிமையை நம்மால் உணர முடியாது.

ஆவிக்குரிய நற்குணங்களை வாழ்க்கையில் வெளிப்படுத்துவதே ஆவிக்குரிய வாழ்க்கையில் நாம் அடைய வேண்டிய வெற்றிகளாகும். இந்த வெற்றிகள் நம்மை அறியாமல் தானாக வந்து விடாது. நாம் செயல்பட வேண்டும். பொறுமையாயிருக்க நீங்கள் முடிவு செய்து செயல்பட முன்வராவிட்டால், பொறுமையாக இருக்கத் தேவையான வல்லமை உங்களில் செயல்படாது. நன்மை செய்ய முடிவு செய்து,

முன்வந்து செயல்பட துவங்காதவரை நன்மை செய்ய தேவையான வல்லமை உங்களிடம் வராது. போதிய அளவு ஜெபத்துடன் நற்குணங்களையும், நற்செயல்களையும், செயல்படுத்த முன்வந்தால் அவைகள் உங்களால் முடிந்த காரியங்களாக இருப்பதை காண முடியும். யோர்தான் நதியில் விசுவாசத்துடன் இறங்கி காலை வைத்தபோதுதான் நதி பிரிந்த அற்புதம் நடந்தது.

நாம் செயல்படுவதற்காகவே ஜெபிக்கின்றோம். எனவே ஜெபத்தின் பின் பலத்துடனும் விசுவாசத்துடனும் செயல்பட முன்வருவோம். நல்ல சுபாவங்களை வெளிப்படுத்துவோம். நல்ல செயல்களில் நம்மை ஈடுபடுத்துவோம். அப்போது நம்மால் அவைகள் கூடும். சாத்தியமற்றவைகள் சாத்தியமாகும்.

## நெகேமியா ஒரு போராடுகின்ற மனிதன்!

ஆவிக்குரிய மனிதனாக, ஜெபிக்கின்ற மனிதனாக, செயல்படுகின்ற மனிதனாக நெகேமியா விளங்கினான். ஆயினும் வெற்றி என்பது சிரமமின்றி வந்துவிடவில்லை. செயல்பட துவங்கியதும் தடைகள் பல வந்தன. எதிர்ப்புகள் ஏற்பட்டன. தொந்தரவுகள் வந்தன. மனதை சோர்ந்து போகச் செய்யும் பரிகாச வார்த்தைகளையும், நிந்தையான சொற்களையும் கேட்க நேரிட்டது. எருசலேமின் இடிந்துபோன மதிற்சுவர்களைக் கட்டுவதற்கான வாய்ப்புகள் இல்லை என்று முடிவெடுக்கத்தக்கதான பல சோதனைகள் வந்தன.

ஆனால் நெகேமியா பின் வாங்கவில்லை தொடங்கிய பணியை தொடராமல் விடவில்லை. எப்படியும் செய்து முடிப்பேன் என்ற அழுத்தமான முடிவுடன் அவன் செயல்பட்டான். சூழ்நிலைகள் மிகச்சிக்கலாயிருந்த போதிலும், போராடி வெற்றி கொள்ள அவன் ஆயத்தமாயிருந்தான். தேவன் தனக்கு துணைநின்று எப்படியும் வெற்றி பெறச்செய்வார் என்ற விசுவாசம் அவனிடம் உயிரோட்டமுள்ளதாய் இருந்தது. அவனுடைய நம்பிக்கை வீண்போகவில்லை. இறுதியில் அவன் வெற்றி பெற்றான்

பலவந்தம் பண்ணுகிறவர்கள் தான் பரலோகராஜ்யத்தை அடைய முடியும் என்று இயேசு சொன்னார். (மத்–11:12) ஆம். உயர்ந்த நோக்கங்களுக்காக நாம் போராடித்தான் ஆக வேண்டும். ஆவிக்குரிய வாழ்க்கையின்

வெற்றிகளை நாம் சுமுகமாக பெற்றுவிட முடியாது. ஆர்வத்தோடும், தாகத்தோடும், பின்னோக்க விரும்பாத உள்ளத்தோடும் தொடர்ந்து போராடினால்தான் அவைகளைப் பெற முடியும்.

தடைகளைக் கண்டு நின்று விடுவதல்ல. அவைகளைக் கடக்க பிரயாசப்படுவதே ஆவிக்குரிய வாழ்க்கை. எதிர்ப்புகளைக் கண்டு எதுவும் செய்யாமல் போய் விடுவதல்ல. அவைகளை மேற் கொள்ள போராடுவதே பரிசுத்த வாழ்க்கை. சோதனைகளைக் கண்டு சோர்ந்து போவதல்ல. அவைகளை சந்திக்க தயங்காமல் முன்னோக்கிச் செல்ல ஆர்வப்படுவதே ஆண்டவர் விரும்பும் அனுபவம். எனவேதான் பவுல் அப்போஸ்தலன் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாயிருந்து, விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு என்று தீமோத்தேயுவுக்கு எழுதினான். (11 தீமோ – 2:3; 1 தீமோ – 6 : 12)

போராட நாம் முன்வரும் போது போராடத் தேவையான பலத்தை தேவன் அருளுவார். நற்குணங்களோடு வாழ்வது ஒரு போராட்டம் தான். நற்செயல்களில் தொடர்வது ஒரு போராட்டம் தான். ஆனால் அவ்விதமான போராட்டங்களில் நாம் வெற்றி பெறுவதற்காகவே தேவனால் நாம் அழைக்கப் பட்டிருக்கின்றோம்.

யோசேப்பு பரிசுத்தத்திற்காக ஒரு போராட்டத்தை போராடினான். வெற்றி பெற்றான். தானியேல் அன்னிய தேசக் கலாச்சாரங்களால் தன்னை கறைபடுத்தாமலிருக்க ஒரு போராட்டத்தைப் போராடினான். அவன் வெற்றி பெற்றான். இடிந்து போன மதில்களை மீண்டும் கட்டியெழுப்பி, ஆவிக்குரிய எழுச்சியை ஏற்படுத்த நெகேமியா ஒரு போராட்டத்தை போராடினான். வெற்றி பெற்றான்.

இவர்களையெல்லாம் வெற்றியின் பாதையில் அழைத்துச் சென்று சாதனை புரிய வைத்த தேவன் நம்மையும் அதற்காகவே அழைக்கின்றார். அவருடைய அழைப்பிற்கு நாம் அடிபணிந்தால் நாமும் வெற்றி வீரர்களாக விளங்கப் போவது நிச்சயம்.

*உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன் கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன். இயேசு (யோவான் –* 16:33)

# 7 ஜெபித்தால் மட்டும் ஜெயம் வந்து விடுமா?

கஷ்டங்களும், நெருக்கங்களும், பாடுகளின் அழுத்தங்களும் தேவனுடைய உதவியை நாடுவதற்கு நம்மை வற்புறுத்துவதுண்டு. அங்கே அதிகமாக ஜெபித்து மன்றாடவும், உபவாசித்து கெஞ்சவும் நாம் முன் வருவோம். நம்முடைய அதிகமான ஜெபங்களும், உபவாசங்களும் நமக்கு தேவனுடைய இரக்கத்தைக் கொண்டு வரும் என்று நாம் நம்புவோம். சோதனைகள் நம்மை அதிகமாக தாக்குகின்ற வேளையில் "அதிகமாக ஜெபம் பண்ணுங்கள், கர்த்தர் அதிசயம் செய்வார்" என்று அநேகர் நமக்கு ஆலோசனை சொல்வதை நாம் கண்டிருக்கிறோம்.

உண்மைதான். ஜெபங்களின் வல்லமை அசாதாரணமானது. உபவாசங்களின் விளைவுகள் சக்தி வாய்ந்தவை. ஆயினும் ஜெபங்களும், உபவாசங்களுமே நமக்கு தேவனுடைய உதவியைக் கொண்டு வந்து விடும் என்று கூற முடியாது. ஜெபத்தாலும், உபவாசத்தாலும் மட்டும் எல்லாவற்றையும் சாதித்து விடலாம் என்று சொல்ல முடியாது.

வேதத்தை நன்கு கவனிக்கும் போது இந்த உண்மை விளங்கும். இஸ்ரவேல் ஜனங்கள் சில காலக்கட்டங்களில் உபத்திரவங்களின் நடுவில் அதிகமாக ஜெபித்தார்கள். தங்களைத் தாழ்த்தி உபவாசித்தார்கள். அவர்களுக்கு தேவன் உதவி செய்யும் படி தீர்க்கத்தரிசிகளும் கண்ணீரோடு ஜெபித்தார்கள். ஆயினும் அவர்களின் ஜெபங்களுக்கு எந்த பலனும் கிடைக்கவில்லை.

பல நேரங்களில் தேவன் அவர்களின் ஜெபத்தை தம்மால் கேட்க முடியாது என்றார். சில வேளைகளில் அவர்களுக்காக ஜெபித்த தீர்க்கத்தரிசிகளையும் தேவன் தடை செய்தார். (ஏசாயா – 1:15; 58:1; 59 : 1,2; எரேமியா – 7: 16 ; 11 : 14 : 14 : 11; எசேக்கியல் – 20 : 4)

ஒரு குறிப்பிட்ட குடும்பத்தார் தங்களுக்கு நேரிட்ட மிகுந்த இக்கட்டுகளின் நடுவில் இடைவிடாமல் ஜெபித்தார்கள். பல நாள் உபவாசம் இருந்தார்கள். அநேகம் ஊழியர்கள் அவர்களுக்காய் ஜெபித்தார்கள். ஆயினும் அவர்களின் இக்கட்டு விலகவேயில்லை. எனவே அந்தக் குடும்பத்தார் சோர்ந்து போனார்கள். இவ்வளவு ஜெபித்தும், எந்த பயனும் இல்லையே என்று கூறி தேவன் மேல் தாங்கள் கொண்ட அதிருப்தியை வெளிப்படுத்தினார்கள்.

ஏன் இடைவிடாமல் ஜெபித்தும் எந்த பயனும் கிடைக்கவில்லை? ஜெபம், உபவாசம் ஆகியவைகளுக்கு முன்னால் வேறு ஏதோ ஒன்று அவசியமாகிறது என்பதையே அது சிந்திக்கத் தூண்டுகிறது.

இன்று ஜெபத்தைக் குறித்தும், உபவாசத்தைக் குறித்தும் எக்காலத்திலும் இல்லாத அளவில் அதிகமாக பிரசங்கிக்கப்படுகிறது. இது தொடர்பாக எழுதப்பட்ட புத்தகங்கள் கொஞ்சமல்ல. எனவே ஜெபித்தால் பெரிய காரியங்களைக் காணலாம் என்ற நம்பிக்கை மக்களின் மனதில் பெருகியுள்ளது.

ஆயினும் ஜெபம், உபவாசங்களை மட்டுமே நாம் அளவுக்கதிகமாக நம்பிவிடக் கூடாது.ஜெபித்து உபவாசித்து எல்லாவற்றையும் சாதித்து விடலாம் என்று எண்ணி விடக் கூடாது. கஷ்ட நேரங்களிலும், ஆபத்தான வேளைகளிலும் கர்த்தருடைய கரத்தின் வல்லமையான செயல்களைக் காண்பதற்கு வேதம், கூறுகின்ற ஒழுங்குகளை நாம் கவனித்து மதிக்க வேண்டும். அந்த ஒழுங்குகளை கவனித்து கடைபிடிக்காவிட்டால் நம்முடைய ஜெபங்களும், உபவாசங்களும் விண்ணைச் சென்று சேராது.

நம்முடைய இக்கட்டு வேளைகளில் தேவ உதவியைத் தேடி அதிகமாக ஜெபிக்கவும், உபவாசிக்கவும் செல்லும் முன்பு, தேவ உதவியைப் பெற வேதம் கூறுகின்ற ஒழுங்கு என்ன என்பதைப் பார்க்க வேண்டும். தேவனுடைய இரக்கத்தைப் பெறுவதற்கு முக்கியமான சில படிகளை நாம் கடக்க வேண்டியது அவசியம்.

## ஆராய்ந்து பார்த்தல் அவசியம்

இக்கட்டான அல்லது துன்பமான சூழ்நிலைகளில் தேவ உதவியை நாம் நாடும் போது முதலாவது தேவனுக்கும் நமக்கும் இடையே உள்ள உறவு நிலைகளைக் குறித்து ஆராய்ந்து பார்க்க வேண்டும். கடந்த நாட்களில் நம்முடைய வாழ்க்கைப் போக்குகளால் அவரை நாம் கோபமூட்டியிருக்க முடியும். அவருடைய வார்த்தைகளை மதியாமல் மனம் போல வாழ்ந்து கொண்டிருந்திருக்க முடியும். நம்முடைய சுய வழிகளைச் சார்ந்த வாழ்க்கையால், தேவனுடைய வழிகளுக்கு எதிராக சென்று கொண்டிருந்திருக்க முடியும்.

சிலவேளை இவைகளே நம்முடைய துன்பங்களுக்கும் தொல்லை களுக்கும் காரணமாயிருந்திருக்க முடியும். சிலவேளை இவைகளை விட்டு விலகி தேவனை நோக்கி வருவதற்காக அவைகள் தேவனால் அனுமதிக்கப்பட்டிருக்க முடியும். அங்கே முதலில் ஜெபம் அல்ல. முதலில் வாழ்க்கையை சோதித்து பார்த்தலே அவசியமாயிருக்கிறது. கர்த்தருக்குப் பிரியமற்ற அந்த பாவமான போக்குகளைக் கண்டறியாமலே நாம் ஜெபித்துக் கொண்டும், உபவாசித்து கொண்டுமிருந்தால் எந்த நன்மையும் தோன்றாது.

ஒரு கால கட்டத்தில் இஸ்ரவேல் மக்கள் அவ்விதம் தான் அதிகமாக ஜெபித்து, உபவாசித்து தேவனுடைய உதவியைத் தேடினார்கள். ஆயினும் அவர்களுடைய துன்பங்களிலிருந்து தேவன் அவர்களை விடுவிக்க முன்வரவில்லை. அதன் காரணத்தை ஒரு நாள் தேவனுடைய தீர்க்கனாகிய ஏசாயா தெளிவாகக் கூறினான். இதோ

இரட்சிக்க கூடாதபடிக்கு கர்த்தருடைய கை குறுகிப் போகவுமில்லை. கேட்க கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும், நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது" என்று ஏசாயா கூறினான்.

(ஏசாயா – 59 : 1,2)

ஆகாய் தீர்க்கத்தரிசியின் காலத்தில் வாழ்ந்த யூத ஜனங்கள் தொடர்ந்த தோல்விகளால் தொய்ந்து போயிருந்தார்கள். அவர்களின் முயற்சிகள் எல்லாவற்றிலும் வேதனையே விளைவாகயிருந்தது. அங்கே அவர்களின் இறை வேண்டல்களும், விண்ணப்பங்களும் எந்த நல்விளைவையும் கொண்டு வரவில்லை.

அவர்களின் துன்பங்களிலிருந்து விடுவித்து, அவர்களை ஆசீர்வதிக்க விரும்பிய தேவன் முதலாவது அவர்கள் தங்கள் வாழ்க்கையையும், கடந்த நாட்களில் அவர்கள் நடந்த விதத்தையும் சிந்தித்துப் பார்க்க கூறினார். (ஆகாய் – 1: 5, 7:2:18) ஆம். தேவன் நம்முடைய கஷ்டங்களிலிருந்து நம்மை விடுவிக்க வர வேண்டுமானால் முதலாவது, அவருக்கு எதிராக நாம் இயங்க வில்லையா என்று ஆராய்ந்து பார்த்தல் மிகவும் அவசியம்.

## கண்களை மறைக்கும் காரியங்கள்

சில வேளைகளில் நம்முடைய வாழ்க்கையைத் திரும்பி பார்க்கும் போது பாவம் என்று கூறத்தக்க மோசமான தோற்றமுடைய எந்த துன்மார்க்க செயல்களும் இல்லாமல் இருக்கலாம். பலருடைய வாழ்க்கையில் காணப்படுவது போன்ற முரட்டாட்டமான போக்கும் நம்மிடம் இல்லாமல் இருக்கலாம். ஆயினும் அதனால் நாம் நீதிமான்களாக இருக்கிறோம் என்று எண்ணிவிடக் கூடாது.

ஆகாய் தீர்க்கன் வாழ்ந்த காலத்து யூத மக்களுடைய துன்பங்களின் காரணம் துன்மார்க்க வாழ்க்கை அல்ல. அவர்கள் பெரிய பாவச்செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கவில்லை. பின்னர் ஏன் அவர்களுக்கு துன்பங்கள்? பின்னர் ஏன் அவர்களுக்கு ஆசீர்வாதம் இல்லை?

அவர்கள் துன்மார்க்கர்கள் அல்ல. ஆனாலும் சரியான சன்மார்க்கம் அவர்களிடம் இல்லை. கர்த்தருக்கு எதிராக அவர்கள் செயல் படவில்லை. ஆனால் கர்த்தருடைய பிரியத்தை அறிந்து அவர்கள் வாழவில்லை. அவர்கள் தேவனுக்கு முன்பாக செய்ய வேண்டியதை செய்வதற்கு முதல் கவனம் செலுத்தவில்லை. அவர்கள் சொந்த காரியங்களை முதலாவது இடத்தில் வைத்து தேவனுடைய காரியங்களை இரண்டாம் இடத்திற்கு தள்ளினார்கள். இதுவே அவர்களின் குற்றம். (ஆகாய் – 1:9)

இன்று அநேகருடைய கண்களை மறைத்து உண்மையை உணரவிடாமல் செய்வது அவர்களுடைய சில நற்செயல்களே. சிலர் தங்களை நெருக்கங்களும் பாடுகளும் அழுத்தும் போது கூட தாங்கள் கர்த்தருக்கு முன்பாக குறைவு பட்டு நிற்பதை உணருவதில்லை. அதற்கு பதிலாக கடந்த காலத்தில் தாங்கள் செய்த நல்ல செயல்களை நினைத்துப் பார்த்து தங்கள் பக்கத்தில் சரி செய்வதற்கு எதுவும் இல்லை என்று எண்ணிக் கொள்வார்கள்.

சில பக்தி ஒழுங்குகள் நம்மிடம் இருந்திருக்கலாம். சில தயைமிக்க காரியங்கள் நம்மிடம் இருந்திருக்கலாம். சில ஊழியங்களையும், ஊழியர்களையும் நாம் தாங்கியிருக்கலாம்.

ஆனால் இவைகள் யாவும் நாம் தேவனுக்கு பிரியமாக வாழ்ந்திருக்கிறோம் என்பதற்கான சரியான அடையாளங்களல்ல.

நாம் இயேசுவினால் வரும் இரட்சிப்பை பெற்றிருக்கிறோமோ? நாம் தேவன் தரும் மறுபடியும் பிறந்த அனுபவத்தை பெற்றிருக்கிறோமோ?

நாம் குணங்களாலும், சுபாவங்களாலும் தேவனைக் கனப்படுத்தும் வாழ்க்கையை வாழ்கின்றோமோ? நாம் தேவனால் நடத்தப்படுவதற்கு முழுமையாக நம்மை அர்ப்பணித்திருக்கிறோமா? இவ்வித கேள்விகளுக்கு நம்முடைய பதில் என்ன என்பதே முக்கியம்.

நம்முடைய வாழ்க்கையை ஆராய்ந்து இவ்விதமான கேள்விகளை கேட்டு நம்முடைய நிலையைக் கண்டுபிடிக்க வேண்டும். குறைவு படுவதைக் கண்டால் நம்மை சரி செய்ய முன்வரவேண்டும். தேவ உதவியை கேட்டு விண்ணப்பிக்கும் முன்பு தேவவிருப்பம் நம்மில் நிறைவேற நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும். முதலாவது ஒரு சரியான தேவ ஒழுங்குக்குள் அல்லது ஆவிக்குரிய ஒழுங்குக்குள் நாம் வரவேண்டும். அப்போதுதான் நமக்கும் தேவனுக்கும் இடையே உள்ள தடை நீங்கும். அங்கே நம்முடைய கூப்பிடுதலைக் கேட்க தேவனுடைய காதுகள் திறந்திருக்கும்.

இந்த படிக்கு அடுத்த படியில்தான் நம்முடைய ஜெபங்கள் தேவ சமுகத்தை அசைக்கும். அப்போதுதான் தேவனுக்கு முன்பாக நம்முடைய விண்ணப்பங்களும் உபவாசங்களும் அங்கீகரிக்கப்பட்டு, நம்முடைய வாழ்க்கையில் மாபெரும் ஆசீர்வாத திருப்பங்கள் ஏற்பட வழிபிறக்கும். அங்கே நம்முடைய ஜெபங்களும் உபவாசங்களும் நிச்சயம் வீண் போவதில்லை.

அப்பொழுது நீ கூப்பிடுவாய் கர்த்தர் மறு உத்தரவு கொடுப்பார். நீ சத்தமிடுவாய் இதோ நான் இருக்கிறேன் என்று (தேவன்) சொல்லுவார். (ஏசாயா – **59 : 9**)

# 8 தஞ்சமே... இயேசு என் அடைக்கலமே!

தேவனோடு நெருங்கிப்பழகி, உறவாடி தேவனுடைய அன்பை அதிகமாக ருசித்த வேதாகம மனிதர்களில் மிகவும் முக்கியமானவன் தாவீது. அந்த அனுபவத்தின் நிறைவினால் அனேகம் சங்கீதங்களைப் பாடினான். இந்த நெருக்கமான உறவிற்கும், வெற்றியான வாழ்க்கைக்கும் மூலகாரணமாக இருந்தவை அவன் தேவனுடைய வழிகளில் நடந்தபோது சந்தித்த எண்ணிலடங்கா பாடுகள் ஆகும். துன்மார்க்கனுக்கு துன்பம் நேரிடுகிறது போல, சன்மார்க்கனுக்கும் ஏற்படுகிறது என்று சாலோமன் இராஜா மனம் சலித்து போனான். (பிர 9-2) சிலவேளை துன்மார்க்கனுக்கு நேரிடுவதைவிட அதிகமான துன்பங்கள் தேவனுக்குப்பயந்து நடக்கிறவனுக்கு ஏற்படவே செய்கிறது. ஆனால் சோதனைகளின் நடுவிலே துன்மார்க்கன் அதை சந்திக்கும் விதத்திலும், தேவனுக்கு பயந்தவன் சந்திக்கும் விதத்திலும் வேறுபாடுகள் உண்டு.

நீதிமான் அழுகையின் பள்ளத்தாக்குகளை சந்திக்க நேரிடுவது உண்மை. ஆனால் அவன் அதை உறுதியாக கடந்து செல்வதோடு, அதை நீரூற்றுக்கிக் கொள்கிறான். (சங். 34-6). ஆனால் துன்மாக்கனோ அந்த இடத்தில் விழுந்து போகிறான். தேவனுக்கு பிரியமானவர்களே! கர்த்தருக்கு கீழ்படிந்து வாழும் உங்கள் வாழ்க்கையின் பாதையிலும் அழுகையின் பள்ளத்தாக்குகளைக் கண்டு கலங்கி நிற்கிறீர்களா? பரிசுத்தமாக வாழும் எனக்கு ஏன்

இத்தனை துன்பம் என்று பரிதவிக்கிறீர்களா? ஒரு நிமிடம் உங்கள் கண்ணீரை துடைத்துக் கொள்ளுங்கள். உங்கள் உள்ளத்தை சற்று திடப்படுத்திக்கொள்ளுங்கள். உங்கள் ஏக்கங்கள் நியாயமானதே. ஆனாலும் வேதம் எல்லாவற்றிற்கும் விடைகளைக்கொண்டதாக இருக்கிறது. சற்று நேரம் தேவனுடைய ஆராய்ந்து முடியாத வழிகளை அறிய ஆசைப்படுவோமாக.

## பாடுகளின் மத்தியில் பரிபூரண தேவ அழைப்பு

*அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள். (11–திமோ 3–12)*

தேவனால் வருகிற யாவுமே பரிபூரணமானவைகள். தேவனால் உருவாகிற யாவுமே புடமிடப்படுகிற அனுபவத்தை கடந்தே செல்லும். தேவனால் எந்த மனிதன் அதிகமாக நேசிக்கப்படுகிறானோ அல்லது தேவனை எந்த மனிதன் அதிகமாக நேசிக்கிறானோ அவன் வாழ்வில் பாடுகள் நிச்சயம்உண்டு. அந்த பாடுகள் அவனுடைய வாழ்வில் தேவன் இல்லை என்பதற்கு அடையாளமாக இராமல், தேவன் அவனோடு நெருக்கமாக இருக்கிறார் என்பதற்கே அடையாளமாக உள்ளது. தேவனுக்கும், மனிதனுக்கும் இடையே உள்ள உறவும், அன்பும் பாடுகளால் நிரூபிக்கப்படுகிறது. தேவன் மேல் உள்ள உண்மையான விசுவாசம் பாடுகளால் புடமிடப்படுகிறது

(1 பேதுரு1–7)

யாரை தேவன் அதிகமாக நேசிக்கிறாரோ அவர்களை சிட்சிக்கிறார் என்று வேதம் சொல்கிறது. (எபி.12–6). இந்த சிட்சை தவறுசெய்தவன் சிட்சிக்கப்படுவது போலல்ல. இது தன் பிள்ளையை உயரமான நிலைக்கு கொண்டுவர விரும்பும் தகப்பன் பிள்ளையை எச்சரிக்கையாக வளர்ப்பது போலாகும். தேவனுக்கு பயந்து, பரிசுத்தமாக வாழும் மக்களுடைய வாழ்க்கையில் அவர் அதிகமான உரிமையை எடுத்துக்கொள்கிறார். அவர்களையே தம்முடைய மகிமையையும், வல்லமையையும் வெளிப்படுத்தும் கருவிகளாக

மாற்றுகிறார். பாடுகள் வழியாகவே தேவன் அந்த நோக்கங்களை நிறைவேற்றமுடியும்.

யோபு, தாவீது, யோசேப்பு போன்ற பக்திமான்கள் யாவருமே தேவனுக்கு மிகவும் நெருக்கமானவர்கள். எனவே அவர்கள் வழியாக தமது வல்லமையை வெளிப்படுத்தவேண்டி அவர்களை நெருக்கமான பாதைகள்வழியாக தேவன் அழைத்துச் சென்றார். யோபுவின்மேல் தேவனுக்கு அதிகமான அன்பும் உரிமையும் இருந்தது. எனவே தமது மகிமையை வெளிப்படுத்தவும் அவனுடைய நீதியை நிரூபிக்கவும் விரும்பி அவன் வாழ்வில் பாடுகளை அனுமதித்தார். எனவே அவன் கைகளிலே கொடுமை இல்லாதிருக்கையிலும், அவன் ஜெபம் சுத்தமாயிருக்கையிலும், வேதனைகள் அவனை சூழ்ந்துகொண்டன. (யோபு – 16:17)

## இவர் என் நேச குமாரன்

கர்த்தரோ அவரை நொறுக்க சித்தமாகி, அவரை பாடுகளுக்குட்படுத்தினார். (ஏசா – 53–10).

பிதாவாகிய தேவனும், குமாரனாகிய கிறிஸ்துவும் ஒன்றாக இருந்தார்கள். (யோவான் – 10–30) பிதா அவரில் அன்பாயிருந்தார். (யோ 15–9) இவர் என் நேசகுமாரன். இவரில் நான் பிரியமாயிருக்கிறேன் என்று உலகத்திற்கு அவரைப்பற்றி சாட்சி கொடுத்தார். ஆனால் அன்பாயிருக்கிற அதே வேளையில் அவரை கடூரமான பாடுகளுக்கு ஒப்புக் கொடுத்தார். அவர் துக்கம் நிறைந்தவராகவும், வியாகுலம் மிகுந்தவருமாயிருக்க வேண்டி வந்தது. இதற்கு காரணம் என்ன? தம்முடைய ஒரே பேறான குமாரன் மேல் அவர் அதிகமான அன்புடையராக இருந்தபடியால், அவர் மூலமாகவே தமது நோக்கங்களை நிறைவேற்ற முன்வந்தார். மனுக்குலத்திற்கு இரட்சிப்பை ஏற்படுத்த அவரை இரத்தம் சிந்த ஒப்புக்கொடுத்தார். அவர் மேல் அன்பாயிருந்தபடியால் பாடுகளின் வழியாக நடத்தி முடிவுமட்டும் தம்முடைய சித்தத்தை நிறைவேற்றினார்.

ஆம். தேவன் தம்முடைய எல்லா செயல்களையும், மகத்துவங்களையும், மகிமைகளையும் தமக்கு சொந்தமானவர்கள் வழியாகவே வெளிப்படுத்த முடியும். சிலுவை சுமக்க மனப்பூர்வமாய் ஒப்புக் கொடுத்தவர்களிடம் மட்டுமே அவர் பரலோக ஐசுவரியங்களை நம்பிக்கையுடன் கொடுக்க முடியும். பிரியமானவர்களே உங்கள் கைகள் சுத்தமாக இருக்கும்போது உங்கள் வாழ்வில் வரும் நெருக்கங்களுக்காக சோர்ந்து போகாதீர்கள். தேவன் உங்கள் மூலம் மற்றவர்களுக்கு வெளிப்படவும், உங்களை ஆட்கொண்டவர் யார் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளவுமே இந்தச் சோதனைகள் வந்தன.

பிரியமானவர்களே, உங்களை சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றிஎரிகிற அக்கினியைக் குறித்து, ஏதோ புதுமையென்று திகையாமல் கிறிஸ்துவின், மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால், சந்தோஷப்படுங்கள். **(1 பேதுரு – 4–12–13)**

தாவீது தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவன். அவரால் அபிஷேகம் பண்ணப்பட்டவன். அவருடைய ஜனமாகிய மந்தையை மேய்க்க அழைக்கப்பட்டவன். ஆனால் அவனுடைய பாதையில் முட்களும், கற்களும் நிறைந்திருந்தன. மான்கள் நீரோடையைப் பார்த்து வாஞ்சித்து, தாகத்தால் கதறுவதுபோல வேதனைகள் நடுவினிலே அவன் தேவனை நோக்கி ஆறுதலுக்காக கதறினான். (சங்42–1) ஆனால் அந்தப்பாதையின் முடிவில் அவன் தேவல்லமையைக் கண்டான். தேவனுடைய வழிகளை அறிந்து கொண்டான். தேவன் நல்லவர் என்பது நிரூபணமாகக் கண்டான்.

## சகலமும் நன்மைக்கேதுவாக மாறும்

*இந்தவியாதி மரணத்துக்கேதுவாயிராமல் தேவனுடைய மகிமைக்கு விளங்குவதற்கேதுவாயிருக்கிறது. **(யோ.11–4)***

பெத்தானியா என்ற சிறு கிராமத்தில் வாழ்ந்த மார்த்தாள், மரியாள், லாசரு என்பவர்களின் ஏழைக்குடும்பத்தை இயேசு அதிகமாக நேசித்தார். லாசரு ஏசுவின் நெருங்கிய நண்பன் என்பது எங்கும் பிரஸ்தாபமாகிவிட்டது. அந்த வழியாக எங்கு சென்றாலும் லாசருவின் வீட்டிற்கு வந்தே போவார். ஆனால் இப்போது லாசருவின் வீட்டில் வேதனை சூழ்ந்திருக்கிறது. லாசரு வியாதிப்படுக்கையிலே வீழ்ந்து விட்டான். லாசரு உயிருக்கு போராடிக் கொண்டிருக்கிறான். இயேசுவை அழைக்க ஆட்கள் அனுப்பப்பட்டனர். இயேசுவோ வரவில்லை. நேரம் கடந்து கொண்டேயிருந்தது. ஆனால் இயேசு வரவில்லை. யாருக்கும் அதன் காரணமும் புரியவில்லை. ஆபத்து வேளையில் இவர் ஏன் வராமல் போய்விட்டார் என்று அவர்கள் மனம் நொந்தது.

இறுதியில் லாசரு மரித்தேப்போனான். இயேசு வரவில்லை. ஒரு நாள்... இரண்டு நாள் முன்று நாள்... இயேசு வரவேயில்லை. இயேசு இருந்திருந்தால் தங்கள் சகோதரன் மரித்திருக்கவேமாட்டான் என்ற எண்ணம் அவர்கள் உள்ளத்தை புண்ணாக்கியது. எல்லாருடைய சிந்தைகளும் இயேசு வராமல் போனதைப்பற்றியே இருந்தது. ஏன் மரியாளே! இயேசுவோடு மிகவும் நெருக்கமாயிருந்தீர்களே இயேசு... இயேசு என்று உயிரை விட்டீர்களே ! நான் இயேசுவின் நண்பன் என்று உங்கள் தம்பி சொல்லிக்கொண்டே நடந்தானே! இன்று மரித்து மூணுநாளாகியும் அந்த இயேசு வரவில்லையே... இனியுமா அவரைப்பற்றி சிந்தித்து கொண்டிருக்கிறீர்கள் . இப்படியெல்லாம் ஊரார் கேட்டிருப்பார்கள். பதில் சொல்ல முடியாமல் அவர்கள் தவித்துப்போயிருக்கலாம்.

உங்கள் வாழ்க்கையிலும் இதே கேள்விகள் எழும்பியிருக்கலாம். இயேசு இருந்தால் ஏன் எனக்கு இவ்வளவுப்பாடுகள் என்ற நொந்து போயிருக்கலாம். பைபிளை தூக்கிகொண்டு நடந்தாயே... இயேசு வந்த வீட்டில் சந்தோஷமே என்று பாடினாயே... இன்று ஏன் இந்த நிலமை

என்று மற்றவர்கள் கேட்கத்தகுந்த சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனாலும் பிரியமானவர்களே! உங்கள் நம்பிக்கையில் உறுதியாக இருங்கள். இவைகள் யாவையும் நன்மைக்கேதுவாகவே மாறும். இவைகள் உங்கள் வாழ்க்கையை அழித்துப்போடும்படி வராமல், இயேசு உங்களோடிருக்கிறார் என்பதை நிரூபிக்கவே வந்துள்ளது. அந்த விசுவாசக்கேடகத்தை உறுதியாகப் பிடித்துக்கொள்ளுங்கள்.

லாசருவின் வீட்டார் இயேசுவுக்கு மிகவும் அன்பானவர்களே. எனவே தம்முடைய மகிமையான செயலை ஜனங்கள் மத்தியில் வெளிப்படுத்த தேவன் அந்த வீட்டை தெரிந்தெடுத்தார். எனவேதான் அவர் வர காலதாமதம் ஆகிறது. ஆனால் அவர் அறியாமல் எதுவும் நடக்கவில்லை. லாசருவை கல்லறையின் ஆழத்திலிருந்து எழுப்பி நிரூபிக்கவும், லாசருவின் நண்பனாகிய இயேசுவே உயிர்தெழுதலும் ஜீவனுமானவர் என்பதை உலகம் அறிந்துகொள்ளும்படியாகவே இவைகள் சம்பவித்தன. உங்கள் வாழ்விலே இயேசு வெளிப்பட விரும்புகிறார் அதற்கு இந்தப்பாடுகளே காரணமாக அமையும். முடிவில் மகிமை விளங்கும்.

## *அதோ ! இயேசு வருகிறார் !*

*எங்களுக்கு வரும் உபத்திரவங்களிலேயும் அவரே ஆறுதல் செய்கிறவர். எப்படியெனில் கிறிஸ்துவினுடையபாடுகள் எங்களிடத்தில் பெருகிறது போல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகிறது . (11 கொரி – 1–4,5)*

துயரப்படுகிறவர்கள் பாக்யவான்கள். அவர்கள் ஆறுதலடைவார்கள் என்று இயேசு சொன்னார் (மத் 5–4 ). கிறிஸ்தவ வாழ்க்கையின் முக்கிய அம்சம் கிறிஸ்துவினால்வரும் ஆறுதலைபெறுவது ஆகும் எங்கே கிறிஸ்துவினிமித்தம் பாடுகள் உண்டோ, அங்கே கிறிஸ்துவினால் வரும் ஆறுதலும் உண்டு. மார்த்தாளை, மரியாளை ஆறுதல்படுத்த அநேகர் வந்தனர். ஆனால் அவர்களின் உள்ளமோ ஆறவில்லை. மனித வார்த்தைகள் உள்ளத்தை

ஆற்ற போதுமானவையே அல்ல. வெறும் வார்த்தைகளால் ஆறுதல்வராது. ஆனால் திடீர் என்று ஒரு செய்திவருகிறது. அதோ... இயேசு வருகிறார் என்று. இனி அவர் வந்து என்ன பயன்? என்று மார்த்தாள் எண்ணவில்லை. ஓட்டமாக எதிர்கொண்டு ஓடினாள்.

ஏன்? இயேசுவை அவள் அறிவாள், அவரே ஆறுதலின் தேவன் என்பதை அறிவாள். இந்த நிலையிலும் அவருடைய ஆறுதலே அவளுக்கு வேண்டும். அவர் வெறும் வார்த்தைகளால் அல்ல ஆறுதலையே தரவல்லவர். அவர் வந்தால் போதும். அவர் வந்துவிட்டால் அங்கே மகிமைவெளிப்படும். சூழ்நிலைகளை கடந்து அவர் வல்லமை வெளிப்படும். ஏனென்றால் அவர் சகல அதிகாரங்களையும் உடையவர்.

பிரியமானவர்களே, அவர் மாறாதவர். மரியாளின் வீட்டை நோக்கி இயேசு காலதாமதமாகி வரவில்லை. மகிமை வெளிப்பட சரியான வேளையிலே வந்துள்ளார். உங்கள் கண்ணீரை அவர் துடைக்க வருகிறார். அது சரியானவேளை, உங்கள் துக்கம் சந்தோஷமாக மாற அவர் வரும் வேளை சரியானதே. பயப்படாமலும் கலங்காமலுமிருங்கள்.

# 9 என்னுடைய சாதனைகள் எத்தனையோ !

## டி.வி. பேசுகிறது.

★ என்னைப் பார்ப்பது பாவம், வாங்குவது சாபம் என்று அனல் தெறிக்க பிரசங்கம் செய்த போதகர்கள் பலர் உண்டு. என்னை சாத்தானின் உறைவிடம் என்று சத்தமிட்டு பேசிய பாஸ்டர்கள் பலர் உண்டு. ஆனால் இன்று வெகுசிலரைத் தவிர மற்ற யாவரும் என்னை விரும்பி அழைத்து வீடுகளில் விசேஷ மரியாதையுடன் கவனிக்கின்றார்கள். என்னே என் சாதனை. புரிகிறதா !

★ உலகமெங்கும் ஒரு காலத்தில் 'ஒஹோ' வென்று நடந்து வந்த ஞாயிறு பிற்பகல் ஆராதனைகள் என்னுடைய வரவால் எவ்வளவாய் பாதித்தது என்பது உங்களுக்குத் தெரியாதா! ஒரு சில இடங்களைத் தவிர மற்ற இடங்களில் அது மறைந்தே போய் விட்டதே.

★ ஆலய ஆராதனைக்கு கணவன் போனால் மனைவி ஆப்சென்ட்; மனைவி போனால் கணவன் ஆப்சென்ட்; இருவரும் சென்றால் பிள்ளைகள் ஆப்சென்ட். குடும்ப ஜெபத்தில் மட்டும் என்ன வாழ்கிறது. ஆனால் என்னுடைய விஷயத்தில் தந்தை, தாய், பிள்ளைகள் சரிசமமாய் ஒருமனப்பட்டு ஒன்றாயிருந்து என்னில் வரும் ஆகாத நிகழ்ச்சிகளை கண்டு களிக்கும் காட்சிகள் நீங்கள் காணாதவைகளா !

★ அங்கொன்று இங்கொன்றாக இருக்கும் அகலத்திரை அரங்குகளைக் கண்டு அவைகள் அகல ஜெபிப்பவர்கள் பலர் உண்டு. நானோ ஒவ்வொரு வீட்டையும் குட்டி திரைஅரங்கமாக்கி வெளியேச் சென்று கெடத் தேவை இல்லாமல் வீட்டிற்குள் இருந்து கொண்டே கெட்டுப் போக எவ்வளவு வசதிகள் செய்து வருகிறேன் பார்த்தீர்களா! இதை விட பெரிய சாதனை என்ன வேணும் !

★ முன்பெல்லாம் இயேசுவின் இரகசிய வருகைக்காக காத்திருக்கிறோம் என்று சொல்கின்ற பல பரிசுத்தவான்கள் கூட இரகசியமாக சினிமாப் பார்ப்பதை மட்டும் விடாமல் இருந்ததுண்டு. அவர் பார்த்து விடுவாரோ, இவர் பார்த்து விடுவாரோ என்று அவர்கள் பயந்து கொண்டே படம் பார்க்க வேண்டியதாயிருந்தது. இன்றோ என்னுடைய தயவால் அவர்கள் விரும்புகின்ற படத்தையெல்லாம் வீட்டிலிருந்து கொண்டே பிறர் பயமின்றி பார்க்க நான் செய்த சேவை சாதாரணமானதா!

★ அறை வீட்டுக்குள் பிரவேசித்து கதவைப்பூட்டி ஜெபம் செய்ய சொன்னார் இயேசு. (மத்– **6:6**) இன்றைய கிறிஸ்தவர்கள் அறை வீட்டிற்குள் பிரவேசித்து கதவைப் பூட்டிக் கொண்டு என்னில் வரும் சினிமாப் படங்களை மிக சிறப்பாகப் பார்த்து ரசிக்கின்றார்கள்.

★ காலம் பொன் போன்றது, போனால் வராதது என்று எச்சரிப்போர் ஏராளம். ஏராளம் கிறிஸ்தவர்கள் இதனை உணர்ந்து கொண்டு ஜெபம், தியானம் போன்றவற்றில் நேரம் வீணாகி விடக்கூடாது என்று விழிப்புடன் செயல்படுகின்றார்கள். ஆனால் எனக்கு முன்பாக உட்கார்ந்துவிட்டால் எவ்வளவு நேரம் போனாலும் எந்தக்கவலையுமின்றி இளைப்பாறுதலாக இருக்கின்றார்கள். என் விஷயத்தில் இந்தத் தாராளத் தன்மையை உருவாக்கியது என் சாதனையல்லவா!

★ என்னிடம் அறிவைப் பெருகச் செய்யும் பல அம்சங்கள் உண்டு. எனவே எல்லோருடைய கண்களுக்கும் நான் பிரியமான ஒரு

பொருள். ஆனால் உண்மையில் என்னால் அறிவடைந்து உயர்கிறவர்களையல்ல. அடிப்படை அறிவையும் இழந்து வாழ்க்கையை அழித்துக் கொண்டிருக்கிறவர்களையே நான் காண்கிறேன். மனிதர்களை அறிவாளிகளாக்குவது போல என்னைக் காண்பித்து அநேகரை முட்டாள்களாக்கும் என்னுடைய தந்திரத்தை ஒரு சாதனை என்றுதான் சொல்வேன்.

★ முன்பெல்லாம் பாலியல் சம்பந்தப்பட்ட சீரழிவுகள் கல்லூரி வயதுகளில் தான் பலரைப் பற்றிக் கொண்டு பாழ்படுத்தியது. இப்போதோ அது ஐந்தாம் கிளாஸ் பிள்ளைகளிடமே ஆரம்பித்து விட்ட அவல நிலையை நீங்கள் அறியவில்லையா? முன்பெல்லாம் காதல், கத்தரிக்காய் என்று அலையும் இளவயது பிள்ளைகளிடம் பிறர் பார்த்து விடுவார்களோ, அறிந்து விடுவார்களோ, என்ற அச்சமாவது இருந்தது. இன்றோ நிலைமை மாறிவிட்டது. "அச்சம் இல்லை, அச்சம் இல்லை அச்சமென்பதில்லையே" என்று பாரதி பாடினது போல பயமின்றி பிள்ளைகள் பறந்து திரிகிறார்கள். யார் பார்த்தால் எனக்கென்ன என்றத் தோரணையில் சுதந்திரமாக தவறுகளில் பிள்ளைகள் வாழ்ந்திட வழிவகுத்தது நானல்லவா. என்னிலே வருகின்ற பலவித சினிமாக்கள் மூலம் தவறுகளுக்குக் கூட ஒரு சமுதாய அந்தஸ்தைப் பெற்றுத் தந்தது என் பெருமையல்லவா.

★ உலகத்தின் பலவிதமான கவர்ச்சிமிகுப் பொருட்களையும் ஆடம்பர சாதனங்களையும் அவ்வப்போது மக்களுக்கு என் மூலம் காண்பித்து பரவசப்படுத்துகின்றார்கள். இதனைப்பார்க்கின்ற மக்கள் அது வேண்டும், இது வேண்டும் என்ற இச்சைகளால் அதிகமாக இழுக்கப்படுகிறார்கள். அதன் மூலம் அநேகர் நாகரீக மாயையில் மூழ்கி ஆடம்பரப்பிரியர்களாகி விடுகின்றார்கள். தங்களால் வாங்க இயலாத பொருட்களை கூட வாங்கியாக வேண்டும் என்ற இச்சையின் கட்டாயத்தால் வாங்க முயற்சிக்கிறார்கள். எனவே அநேகரை கடனாளிகளாக்கி தவிக்க விடுகின்ற என்னுடைய செயல் ஒரு சாதனை தானே !

★ டி.வி. பார்ப்பவர்களின் கண்கள் பாதிக்கப்படும் விஷயத்தை பலர் கூறிக்கொண்டுதானிருக்கின்றனர். டி.வி. யினால் மனநோயாளிகள் ஏராளமாய் பெருகிடும் உண்மையை மனவியல் நிபுணர்கள் சொல்லிக் கொண்டுதானிருக்கின்றார்கள். சமுதாய சீரழிவுகளில் என்னுடைய பங்கு அதிகம் என அநேகர் எச்சரித்துக் கொண்டுதானிருக்கின்றனர். ஆனாலும் என்னுடைய வளர்ச்சி அசுர வேகத்தில் பெருகிக் கொண்டுதானிருக்கிறது. என்னிலுள்ள சில பாவத்தோற்றமற்ற நிகழ்ச்சிகளின் மூலம் நான் தவிர்க்கப்பட முடியாத அவசியமான ஒரு பொருள் என்ற அந்தஸ்தை பேரளவில் பெற்றுவிட்டது ஒரு சாதாரண சாதனையா !

(இன்னும் பல சாதனைகள் என்னிடம் உண்டு. அவைகளை இன்னொரு முறை சொல்கிறேன்)

இப்படிக்கு

உங்களை வீணாக்க விரும்பும்

மிஸ்டர் டி.வி.

பிரியமானவர்களே !

ஒரு வேளை பவுல் அப்போஸ்தலன் இக்காலத்தில் வாழ்ந்திருந்தால் எபேசியர் 6 : 11 ஐப் போல கீழ்க்கண்ட வசனத்தையும் எழுதியிருக்கக்கூடும்.

நீங்கள் டி.வியின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்க திராணியுள்ளவர்களாகும்படி தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் கொள்ளுங்கள் ஏனெனில் வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் அநேகம் செயற்கைக் கோள் சானல்களைக் கொண்ட டி.வி யோடும் நமக்கு போராட்டம் உண்டு. ஆசிரியர்

“பொல்லாங்காய் தோன்றுகின்ற

எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்” 1தெச : 5 : 22)

# 10 பாலுணர்வும் பரிசுத்த வாழ்க்கையும்

★ பாலுணர்வு இறைவனால் மனிதனுக்கு தரப்பட்ட அவசியமான ஒரு வரப்பிரசாதம். அது தூய்மையான ஒரு உணர்ச்சி. ஆனால் இறைவன் அமைத்த விதிகளுக்கு விலகிப்போய் அதனை உபயோகித்தால் அது அசுத்தத்திற்கு வழி வகுக்கும்.

★ பாலுணர்வு ஓடுகின்ற வெள்ளம் போன்றது. அதனை அடக்கிவிட நினைப்பது ஆபத்து.ஆனால் இறைவன் அமைத்த வழிகளை அறிந்து அதனைக் கரைகட்டி ஒழுங்குபடுத்தி விடலாம்.

★ பாலுணர்வு சிலருக்கு இயற்கையாகவே வேகமாயிருக்கும். அதற்காக அவர்கள் மோசமானவர்கள் அல்ல. சிலருக்கு இயற்கையாகவே அது குறைவாயிருக்கும். அதற்காக அவர்கள் மிக நல்லவர்கள் அல்ல.

★ சிலருக்கு ஐம்பதுகளில் பாலுணர்வின் வேகம் தணிந்துவிடும். சிலருக்கு அறுபது, எழுபது தாண்டினாலும் வேகம் குறைவதில்லை. அது இயற்கை, அது பாவமல்ல.

★ இயற்கையாகவே ஆண்களை எளிதில் கவரும் ஆற்றல் பெற்றவர்கள் பெண்கள், பெண்மையினால் எளிதில் இழுக்கப்படும் பலவீனமுடையவர்கள் ஆண்கள்.

★ கிறிஸ்துவோடு நெருங்கி வாழ்தல், ஜெபங்கள், தியானம் இவைகள் மூலம் பல ஆகாத சுபாவங்கள் நம்மை விட்டு அகலும். ஆனாலும் பாலுணர்வு வேகம் குறைவதில்லை. ஏனென்றால் அது, பசி, தாகம் போன்று அவசியமான ஒன்று. அகற்றுவதற்காகத் தேவன் அதை நமக்குத் தரவில்லை. ஆனால் அது நம்மை ஆட்டிப் படைக்கும் எஜமானாக மாறிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

★ ஓர் ஆடவனை பெண் பார்க்கும்போதும், ஒரு பெண்ணை ஆடவன் பார்க்கும் போதும் தானாகவே சில வேளைகாம உணர்வுகள் ஏற்படுவது இயற்கை. அது பாவம் அல்ல. அந்த இழுக்கும் சக்திகளும், ஈர்ப்புவிசைகளும் செயல்படுவதால்தான் திருமண உறவுகள் நடைபெறுகின்றன. ஆனால் அந்த உணர்வுகளுக்கு ஆட்பட்டு, கற்பனைகளிலும், விதிவிலகிய சிந்தனைகளிலும் மூழ்கிக் கறைபடாமல் உஷாராகிவிட வேண்டும்.

★ விசுவாசிகளையும், ஊழியர்களையும் நெடுங்காலம் தொந்தரவு செய்யும் ஒரு சக்தி பாலுணர்வுக்கு உண்டு. பாலுணர்வின் விசைகளுக்கு நடுவில் பக்குவமாக வாழப் பழகாவிட்டால் விசுவாச வீழ்ச்சிகள் எந்த வேளையிலும் நடக்கும் அபாயம் உண்டு.

★ பல நிலைகளில் பாவத்தின் வல்லமைகளை முறியடித்த வெற்றி மிக்க ஊழியர்கள் பலரை பிசாசானவன் பாலுணர்வின் வழியாக தந்திரமாக வீழ்த்தியிருக்கிறான்.

★ பிற பாலினரோடு நெருங்கிப் பழக விரும்புதல், அது போன்ற நிலைகளில் தன்னுடைய கட்டுபாட்டின் சக்தியை அதிகமாக நம்புதல், போன்ற காரியங்களால் பாலுணர்வு பாவங்களல் வீழ்ந்துவிடும் வாய்ப்புகள் உண்டு.

- ★ தங்கள் உடலின் பெரும்பகுதியை உலகத்திற்கு காண்பிக்க விரும்புகின்ற பெண்கள், கவர்ச்சியாக காணப்பட விரும்பும் பெண்கள் ஆகியோர் பரிசுத்தப் பாதையில் செல்கின்றவர்களுக்கு பெருத்த இடறல்களாக இருப்பார்கள்.

- ★ பிற பாலினரோடு பழகுதல் தவறல்ல. ஆனால் எளிதில் வித்தியாசமான உணர்வுகளால் உந்தப்பட்டு, தவறான பாதைகளில் சென்றுவிடும் பலவீனம் தனக்கு உண்டு என்ற விழிப்புணர்வோடு பழக வேண்டும்.

- ★ விசுவாசிகளும், ஊழியர்களும் தங்களுக்கென்று வலுவான வரம்புகளை உருவாக்கி அதற்குள் ஜாக்கிரதையாக நடக்கத் தவறினால் தப்புவது கடினம், தப்பினாலும் தீயிலிருந்து உயிர்த் தப்பியது போலவே இருக்கும்.

- ★ பிற பால்இனத்தவரோடு மனம்விட்டு ஆழமாக பேச விரும்புதல், அல்லது மற்றவரின் மனதின் ஆழங்களை அறிய விரும்புதல் போன்றவற்றை முதலிலேயே தவிர்க்க கவனமாயிருக்க வேண்டும்.தங்களை அறியாமலே ஒருவிதமான உணர்வு இருவருக்கோ அல்லது ஒருவருக்கு மட்டுமோ தோன்ற ஆரம்பிக்கும். அதன் விளைவாக ஒருவருக்கொருவர் மிக முக்கியமானவர்களாக மாற நேரிடும். இறுதியில் பிரிக்க முடியாத ஒரு பிணைப்பு ஏற்பட்டுவிடும். விபரீத விளைவுகள் அதனால் வரும்.

- ★ அறுபது வயதுகளை கடந்து விட்ட நிலையில் பாலஸ்தீனிய யாசர் அரபாத் தன்னுடைய 23 வயது பெண் உதவியாளரை மணந்து கொண்டார். முப்பதுக்கு மேற்பட்ட பேரப்பிள்ளைகளைக் கண்ட முன்னாள் முதல்வர் ராமராவ், தன்னிலும் முப்பத்திரண்டு வயது குறைந்த ஒரு திருமணமான பெண்ணை மறுமணம் செய்து கொண்டார். காரணம் என்ன? நெருக்கங்கள் பெருகும்போது,

விட்டுப்பிரிய விரும்பாத ஒரு மனப் பிரச்சனை ஏற்படுவது இயற்கை, எனவே ஆரம்பித்திலிருந்தே பிற பாலினரோடு உள்ள பழக்கங்களை வரம்புகளுக்குள் நிறுத்த வேண்டும்.

★ பிறபால் இனத்தவரோடு ஏற்பட்டப் பழக்கம் பிரிந்து போக முடியாத நிலைக்கு வரும்போது தன் செயலை நியாயப்படுத்தும் உணர்வு அதிகமாகும். அதன் பின்பு அவர்களை திருப்புவது கடினம் எனவே விசுவாசிகளும், ஊழியர்களும் அந்த நிலைக்குப் போகும் முன்பே தங்களை சரிசெய்துக் கொள்ள வேண்டும்.

★ தனியாகப் பெண்கள் இருக்கும்போது, நெடுநேரம் பேசுதல், ஜெபித்தல், வேடிக்கைப் பேசுதல் போன்றவற்றை ஊழியர்கள் தவிர்க்க வேண்டும். அதுபோன்ற நேரங்களில் வீடு சந்திப்பைத் தவிர்க்க வேண்டும், வீணாகப் போய் ஏன் சாத்தானின் கண்ணிகளில் விழவேண்டும்.

★ திருமணமான, திருமணமாகாத (முதியோர் தவிர) பெண்களை தனியாக ஊழியர்கள் எந்த ஊழியங்களுக்கும் அழைத்துச் செல்லக் கூடாது.

★ ஒரு ஊழியருக்கு அல்லது விசுவாசிக்கு பிறபால் இனத்தவரோடு உள்ளப் பழக்கம் பிறர் பார்வையில் தவறாகத் தோன்றினால் காலதாமதமின்றி தேவையான இடைவெளியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

★ ஊழியரானாலும், விசுவாசியானாலும் இறைவனுக்குரிய காரியங்களில் ஈடுபட்டுத் தங்களை எப்போதும் சுறுசுறுப்பாக்க வைத்திருக்க வேண்டும்.

★ தேவனுடைய சிந்தனைகளால் இதயத்தை நிரப்புதல், தொய்வில்லா ஜெபவாழ்க்கை, தேவப்பிரசன்னத்தில் வாழ்தல் ஆகிய அனுபவங்களால், பாலுணர்வு பாவங்களுக்குள் விழுந்துவிடாதபடி பார்த்துக்கொள்ளலாம்.

# 11 சத்திக்கு மீறிய பிரச்சனைகளின் நடுவில்

இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட வாழ்க்கையிலும் போராட்டங்கள் உண்டு. ஆனால் கிறிஸ்தவர்களாக இருப்பதால்தான் எல்லா போராட்டங்களும் வருகின்றது என்று எண்ணுவது சரியல்ல. ஒவ்வொரு மனிதர்களும் நடைமுறையில் அநேகப் போராட்டங்களை சந்திக்க வேண்டியுள்ளது. ஆனால் அந்த நிலையில் கிறிஸ்தவன் தன்னிடம் செயல்படும் கிறிஸ்துவின் வல்லமையால் அவைகளை மேற்கொள்ள முடியும். அவனுக்கும் போராட்டங்கள் உண்டு. ஆனால் மற்றவர்களைப் போல அவன் தோற்றுப்போகாமல் வெற்றி வீரனாக நிற்கமுடியும்.

சிலவேளை பிரச்சனைகள் உங்களுடைய பலத்திற்கு உட்பட்டு வருகின்றன. சிலசமயங்களில் பலத்திற்கு மிஞ்சி வருகின்றன. சக்தியை மீறிய பிரச்சனைகளைச் சந்திப்பது எப்படி? கிறிஸ்தவ வாழ்க்கை கடவுளின் பலத்தைச்சார்ந்து நின்று செயல்படும் வாழ்க்கை. உங்களால் எதிர்த்து நிற்க முடியாத அளவிற்கு போராட்டங்கள் பெரிய அளவில் வந்தாலும் நீங்கள் தைரியத்தை விட்டுவிடாதீர்கள். ஏனென்றால் உங்கள் சக்திக்கப்பாற்பட்டவைகளாயினும் அவை கடவுளுடைய சக்திக்கு அப்பாற்பட்டவைகள் அல்ல. உங்களுடைய பலத்தைக் கணக்கிட தேவையில்லை. கடவுளுடைய பலத்தைக் கணக்கிட்டால் போதும்.

அதிகமான பிரச்சனைகள் வந்தால் உங்களால் அதிகமாக கடவுளை அறிந்துகொள்ள முடியும். அதிகமான போராட்டங்களை சந்திக்க நேரிட்டால் அதிகமாக தேவனுடைய வல்லமையையும் காணமுடியும். மோசே தாவீது, பவுல் அப்போஸ்தலன் ஆகியோர் எப்போதுமே தங்களது சக்திக்கு மீறிய அளவிலான போராட்டங்களையே சந்தித்தனர். ஆனால் அவர்கள்தான் அதிகமாக கடவுளையும் அவருடைய வல்லமையையும், அவருடைய குணாதிசையங்களையும் தங்கள் வாழ்க்கையில் கண்டவர்கள். நான் விசுவாசிப்பது இன்னார் என்று அறிவேன் என்று பவுலடியார் கூறுகின்றார். (11 திமோ 1 :12) இதற்கு காரணம் என்ன? அவன் சந்தித்த அதிகமான போராட்டங்கள். அவைகளின் நடுவில் கிறிஸ்துவின் மகாவல்லமை செயல்படுவதை அனுபவப்பூர்வமாகக் காண முடிந்தது.

பிரச்சனைகள் எதிர்பாராத வேளைகளில், எதிர்ப்பாராத விதங்களில் உங்களை தாக்கியிருக்கலாம். எதிர்த்து நிற்க எந்த பலமும் இல்லாமல் இருக்கலாம். புரிந்துக்கொள்ள முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கலாம். ஆனால் அங்கும் தேவனுடைய பிள்ளைகளுக்கு நிச்சயமான வழிகள் உண்டு, பிரச்சனைகள் கொஞ்சமாயினும், அதிகமாயினும் கர்த்தருடைய பார்வையில் ஒன்றுதான். இப்போது மறுபடியும் எதிர்நிற்கும் சிக்கலான சூழ்நிலைகளைக் கண்டு கலங்கிக் கொண்டிராமல் கொஞ்ச நேரம் தேவன் தரும் ஆலோசனைகளைக் கேளுங்கள். இந்த ஆலோசனையை யோசபாத் என்ற வேதாகமக்கால மன்னனின் அனுபவத்திலிருந்து கர்த்தர் எடுத்துத் தருகிறார். 2 நாளாகமம் 20-ம் அத்தியாயம் அந்த வெற்றியான அனுபவத்தை விளக்கிக் கூறுகின்றது.

யோசபாத் என்ற யூதாவின் ராஜா ஒருநாள் ஒரு செய்தியைக் கேட்டான். பயந்து நடுங்கச் செய்யும் செய்தி அது. தனக்கெதிராக பகை நாட்டவர் பலர் ஒன்றாக சேர்ந்து யுத்தத்திற்கு வந்திருக்கும் செய்தியே அது. ஏராளமான எண்ணிக்கையுடைய சேனைகள் வந்திருந்தன.

அவர்களை எதிர்த்து நிற்கும் அளவிற்கு பெலனுள்ள வலிமையான படை யோசபாத்திடம் கிடையாது. சக்திக்கும், புத்திக்கும் மிஞ்சிய சூழ்நிலையில் யோசபாத் ஒருகணம் பயந்தே போய்விட்டான்.

ஆனால் உடனேயே தன்னை திடப்படுத்திக்கொண்டான். சூழ்நிலையால் பேதலித்து போகாமல் புத்தியுடன் காரியங்களைச் செய்ய துவங்கினான். இக்கட்டான சூழ்நிலையில் முதலில் போய் வீரர்களை திடப்படுத்தவில்லை. ஆயுதங்களை தயார் செய்யவில்லை. சேனையை பலப்படுத்திக்கொண்டிருக்கவில்லை. எப்படி வெல்வது? என்று விவாதம் செய்து கொண்டிருக்கவில்லை. யோசபாத் முதன்முதலில் வேறொரு காரியத்தைச் செய்தான். எல்லா மன்னர்களையும்போல் செயல்படாமல் வித்தியாசமாக வேறொன்றைச் செய்தான். வெற்றிபெறம் வழியைத் தேடாமல், முதலில் தன்னுடைய தேவனைத் தேடினான். எதிரிகளை வீழ்த்தும்படி மனதை ஒருமுகப்படுத்தாமல், தேவனைத் தேட மனதை ஒருமுகப்படுத்தினான்.

நாம் பலவேளையும் பல வழிகளில் தேடியும் வெற்றி இல்லையெனில், அதன்பிறகே தேவனைத் தேடுகிறோம். தேவனுக்குப் பயப்படுதல் என்பது தேவனை எல்லா சூழ்நிலைகளிலும் முதல் இடத்தில் வைப்பதாகும். சுகமான வேளைகளில் ஆராதிப்பது மட்டும் அல்ல. போராட்டமான சூழ்நிலையில் முதலில் அவரைத் தேடுவதும் அவருக்குச் செய்யும் புத்தியுள்ள ஆராதனையாகும். உங்கள் போராட்டம் எதுவாயினும் முதலில் தேவனைத் தேட வாருங்கள். வேறு யாரையும் தேடிச் செல்லுமுன் முதலில் அவரைத் தேடி கண்டுபிடியுங்கள். அவர் உங்கள் வாழ்வில் முதல் இடத்தில் வைக்கப்பட்டிருந்தால், உங்கள் பிரச்சனைகள் நடுவிலும் முதலில் அவரைத் தேடி வெற்றியைக் காண முடியும்.

நம்முடைய எல்லா கவனங்களையும் ஒரே முனைக்கு திருப்புவதற்கு இன்னொரு பெயர் தேவனைத் தேடுதல் ஆகும். நூற்றுக்கணக்கான வழிகளில் மனதை அலையவிடாமல் ஒரே புள்ளிக்கு திருப்பும்போது

அதுவே போராட்டங்களை ஜெயிப்பதற்கு முதல்படியாக விளங்குகிறது. பலவேளையும் நம் தோல்விகளுக்கு காரணம் என்ன? நம் பார்வைகள் சிதறுகின்றன, நாம் ஒரு பிரச்சனையைப் பல கோணங்களிலிருந்து பார்த்து குழம்பிப் போய்விடுகிறோம். இதற்கு மாற்றுவழி எண்ணங்களை ஒருமுகப்படுத்துதல் ஆகும். அதற்கு ஒரேவழி தேவனைத் தேடுதல் ஆகும்.

தேவனைத் தேடுகிற அனுபவம் நம்முடைய இருதயத்தை ஒரு புள்ளிக்கு நேராக கொண்டு வருகிறது. இதற்காக பவுலடியார் இரண்டு ஆலோசனைகளைத் தருகிறார். *ஒன்று பின்னானவைகளை மறப்பது, இரண்டு, முன்னானவைகளை நாடுவது*(பிலி – 3:13) ஒரு பிரச்சனையை சந்திக்கும்போது இப்படி நடக்குமோ, அப்படி நடக்குமோ என்ற அநேகம் சந்தேகங்களும், பதப்பதைப்புகளும் ஏற்படும். இதிலிருந்து விடுபட ஒரேவழி, இவைகளைக் குறித்து எண்ணிக்கொண்டிராமல், எதுவானாலும் தேவசித்தத்தை மீறி வரப்போவதில்லை என்ற முடிவில் நிலைத்திருப்பதுதான். இரண்டாவதாக தேவனைப் பற்றிக் கொண்டு, அவர்மூலமாய், அவரைக் கொண்டு இந்த பிரச்சனையை சந்திப்பதற்காக, அவர் காட்டும் திசையை நோக்கி ஓடுவதாகும். நாம் அவரை மட்டும் நோக்கினால், அவர் நம் பிரச்சனைகளின் தீர்வுகளை நோக்குவார்.

இதனை செயல்முறைப்படுத்துவது கடினமான காரியம்தான். ஆனால் ஒருகணம் பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளும் வழியை மட்டும் குறியாகக் கொள்ளாமல் தேவனுக்குப் பிரியமானதை மட்டும் செய்வதை குறியாகக் கொள்ளும்போது சாத்தியமாகிறது. எபிரேயர் நிருபத்தை எழுதிய தேவனுடைய மனிதர் இயேசு கிறிஸ்துவையே நமக்கு மாதிரியாகக் காட்டுகிறார். இயேசு கிறிஸ்துவைச் சுற்றிலும் ஏராளமான நெருக்கங்கள் சூழ்ந்து நின்றன. ஆனாலும் அவர் பொறுமையை இழக்கவில்லை. சமாதானம் அவரைவிட்டு அகலவில்லை. அவருடைய ஒரேகுறி பிதாவின் சித்தம்

செய்தல். எனவே எல்லாத் தடைகளையும் வெற்றியுடன் கடந்தார்.

முதலில் நமக்கு பாரமான யாவற்றையும் நாம் தள்ளிவிட வேண்டும். இயேசு கிறிஸ்துவின்மேல் கண்களை வைத்து அவரின் பின்னால் பொறுமையாக ஓடும்போது அது சாத்தியமாகிறது. யோசபாத் தனக்கு முன்னால் நிற்கும் பெரிய பிரச்சனையை சந்திக்கும்முன் தேவனைத் தேடி அவரையே சந்திக்க விரும்பினான். எனவே அவனது மனம் ஒருமுனைப்பட்டது. அதுமட்டுமின்றி தன்னோடு சேர்ந்து தேவனிடம் சகாயம்பெற மற்றவர்களையும் தூண்டினான். பலரை ஒன்றுதிரட்டி ஒரு திசைப்படுத்தினான். நாம் தேடுவது ஒருபுறம் இருக்க, மற்றவர்களையும் அந்த வழிக்கு அழைப்பது மிகவும் வெற்றியானது. ஒரு குடும்பமாக, ஒரு சபையாக ஒரு கூட்டமாக தேவனைநோக்கி ஒரு முகப்படும் போது அங்கே பெரிய பிரச்சனை எளிதாக அகலத் தொடங்குகின்றன.

வேறுபட்ட துருவங்கள் ஒருமைக்குள் வருவதையே தேவன் விரும்புகிறார். வேற்றுமையில் ஒற்றுமை பெரிய சாதனைகளைச் செய்கிறது. பல்வேறு மனநிலையை உடையவர்கள், ஒரு குறிப்பிட்ட குடையின் கீழ் இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் வரும்போது அங்கே தேவன் தம்முடைய பலத்த புயத்தை வெளிப்படுத்துகிறார். ஒருவர் பாரத்திற்காக, இன்னொருவர் தன் தோளினை தயாராக்கும்போது, இருவரின் பாரங்களும் விலகிப் போகிறது. பலருடைய ஒருமனப் பாட்டிற்கு இயேசுவின் நாமம் உபயோகிக்கப்படும்போது அங்கே பலத்த கிரியைகள் ஏற்படத் தொடங்குகின்றன.

பல திசைகளிலிருந்து நெருக்கங்கள் உங்களைப்பற்றிக் கொள்ள வரும்போது, உங்கள் உறவு தேவனோடு அதிகமாக நெருக்கமாகட்டும். பெரும்பாடுள்ள ஸ்திரீ திரளான ஜனங்களால் அதிகமாக நெருக்கப்பட்டாள். அவளுடைய பலவீனமான சரீரம் அதனால் அதிகமாக பாதிக்கப்பட வாய்ப்புண்டு, ஆனால் அவளது ஒரேகுறி எப்படியாவது இயேசுவை தொடுவது என்பதாகும். அந்தக் குறியை

மட்டும் உறுதியாகக்கொண்டு கூட்டத்தின் உள்ளே பிரவேசித்தாள். அது அவளை முற்றிலும் சுகமுடைய ஸ்திரீயாக மாற்றியது. (மாற்கு 5–29)

பிரச்சனைகளையே நோக்கிக் கொண்டிராதீர்கள். அவைகள் அங்கே இருக்கட்டும். வீண் கவலைகளால் விடுதலை இல்லை. இதுவே தருணம் என்று எண்ணி இயேசுவை நோக்கிப் பாருங்கள். அவரிடம் வெற்றி உங்களுக்காக நிச்சயம் உண்டு. அதைக்குறித்து சந்தேகம் வேண்டாம். நிச்சயம் அதனைக் காணமுடியும், ஆனால் விடாப்பிடியாக தேடுகிறவர்களே அதனைக் கண்டு கொள்கிறார்கள். முதலில் "*தேவனுடைய இராஜ்யத்தை தேடுங்கள்*" என்று இயேசு சொன்னார். (மத் 6–33) அவருடைய ஆளுகைக்குள் பிரச்சனைகள் கொண்டுவரப்படும்போது, அவருடைய கரத்திற்கு எல்லாம் உட்பட்டு விடுகின்றன. அங்கே தெய்வீக சமாதானம் உங்களை ஆட்கொள்ளும்.

யோசபாத்தும், அவனுடைய நாட்டுமக்களும் எதிரியின் திரளான சேனைகளுக்கு முன்பாக நிற்கும் முன்பு தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் போய் அவருக்கு முன்பாக நின்றார்கள். (2நாளா – 20–13) அங்கு யோசபாத் தேவனோடு பேசத் துவங்கினான். ஆம். ஜெபிக்கத் துவங்கினான். அந்த ஜெபம் மிகவும் அர்த்தபுஷ்டி வாய்ந்தது. அது வெறும் வாயின் வார்த்தைகளாக இராமல், இருதயத்தின் வெளிப்பாடாகவும், திட்டமான தீர்மானமாகவும் இருந்தது, இங்கே யோசபாத் செய்யும் ஜெபத்தில் நான்கு அம்சங்கள் மிகவும் முக்கியமானது. ஏராளமான நெருக்கங்களுக்கிடையில் தடுமாறி நிற்கும் உங்களுக்கு அவை உறுதியான ஆலோசனைத் தருகின்றன.

அவைகளாவன.

1. தேவனைப் பார்க்கும் விதம்
2. வாக்குத் தத்தங்கள் நினைவு கூரப்படுதல்
3. நிலமைகளை அப்படியே விவரித்தலும்

பலவீனத்தை ஒப்புக் கொள்ளுதலும்

4. எதைச் செய்யப் போகிறோம் என்ற முடிவு

## தேவனைப் பார்க்கிற விதம்

பிரச்சனைகளின் மத்தியில் ஜெபிக்கின்றோம். அங்கே யாரைப் பார்த்து ஜெபிக்கிறோமோ, அவரைக் குறித்து நம்முடைய அறிவு முழுமையாக இருக்க வேண்டும். கடவுள் கடவுளாகப் பார்க்கப்படவேண்டும். அவருடைய வல்லமை அங்கே நினைவில் இருக்க வேண்டும். அவர் எப்படி வல்லவராக இருக்கிறாரோ, அதே வல்லமையுள்ளவராகப் பார்க்கப்பட்டு அழைக்கப்பட வேண்டும். அவர் நம்முடைய பிரச்சனைகளைவிடப் பெரியவர். உலகிலுள்ள எல்லாவற்றையும்விட அவருடைய அதிகாரம் மிகவும் அதிகமானது.

இவைகள் வெறும் வார்த்தைகளில் இருக்கக்கூடாது. அவரை எப்படிப்பட்ட வல்லவராக விசுவாசிக்கிறோமோ அதே நிலையில் அவரை எதிர்பார்க்கவும் வேண்டும். அதே நிலையில் அவர் நம் வாழ்வில் உயர்த்தப்பட வேண்டும். எவ்வளவு உயரமாக அவரைக் கணக்கிடுகிறோமோ, அவ்வளவு உயரமாக அவர் நம்மத்தியில் கனத்தைப் பெற வேண்டும்.

யோசபாத்தின் ஜெபத்தின் முதற்பகுதி தேவனை அவன் பார்க்கும் விதமாக இருந்தது. அவன் முன்பாக நிற்கும் பிரச்சனை மிகவும் பெரியது. அதற்கு மகாவல்லமை தேவைப்பட்டது. அத்தகைய வல்லமையுடையவராக தேவனை அவன் பார்த்து அறிக்கை இட்டான். யோசபாத்தின் தேவனை எவரும் எதிர்த்து நிற்க முடியாது. யோசபாத்தின் தேவன் சகல இராஜ்யங்களையும் ஆளுகின்றவர் இதுவே அவனது அறிக்கை.

நீங்கள் ஜெபத்தில் தேவனை வல்லவர் என்று சொன்னால் வல்லவராகவே அவர் செயல்படுவதை விசுவாசியுங்கள். சகலத்தையும் செய்யும் பெலன் உள்ளவராக ஜெபத்தில் அவர் உச்சரிக்கப்பட்டால்,

உங்களது அதிகமான பிரச்சனைகளையும் மேற்கொள்ளும் பெலனுடையவராக அவரைப் பாருங்கள். அதுவே வெற்றியின் பார்வை. அவர் பெரியவராக எண்ணப்பட்டும், கௌரவிக்கப்பட்டும் இருந்தால் அப்படியே பெரியவராக உங்கள் வாழ்வில் அவர் இருப்பார்.

## வாக்குத்தத்தங்கள் நினைவுகூரப்படுதல்

தேவனிடமிருந்து நமக்கு ஏராளம் வாக்குத்தத்தங்கள் உண்டு. இவைகள் நம் நெருக்கங்களுக்கிடையில் நினைவு கூரப்பட வேண்டும். அவைகள்மேல் உரிமைக் கோரப்படவேண்டும். வாக்குத்தத்தங்களை நாம் நினைவுக்கூராமலேயே அவர் அறிவார். ஆனால் நாம் எந்த அளவிற்கு அவருடைய வாக்குத்தத்தங்களை நினைவில் வைத்துள்ளோம் என்பதை அவர் காண விரும்புகிறார். நமக்காகத் தரப்பட்டவைகளைக் குறித்து நமக்கு மிகவும் அக்கறையும், கரிசனையும் வேண்டும். யோசபாத் தன்னுடைய முற்பிதாக்களுக்கு தேவன் அளித்த வாக்குத்தத்தங்களைக் குறித்த நிச்சயத்தை உடையவனாக இருந்தான். அவருடைய சமுகத்தில் அவைகளை நினைவு கூர்ந்தான். தன் தகப்பன் சொத்துக்களுக்கு உரிமை கொண்டாடும் மகனைப்போல யோசபாத் தேவனிடம் வாக்குத்தத்தங்களைக் காட்டி விண்ணப்பம் செய்தான்.

உயிரோடெழுந்த இயேசு கிறிஸ்துவினால் நமக்கு உரிமையாகும் சொத்துக்களைக் குறித்து நாம் உணர்வுடையவர்களாக இருக்க வேண்டும். இயேசுக்கிறிஸ்துவின்மூலம் நாம் பிதாவிடமிருந்து எல்லாவித பாதுகாப்புகளையும் பெறுவதற்கு உரிமைப் பெற்றுள்ளோம். உங்களுக்கு முன்பாக உள்ளத் தேவைகளை உங்களிடம் உள்ள குறைவானவைகளோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டாம். தேவனிடம் உங்களுக்காக வைக்கப்பட்டுள்ள அளவிலடங்காத சொத்துக்களோடு ஒப்பிட்டுப் பார்க்கப்பட வேண்டும்.

நீங்கள் ஒன்றையுங்குறித்து கவலைப்பட வேண்டாம் என்று வேதம் சொல்கிறது. (பிலி 4–6) ஏனென்றால் எல்லா எதிர்மாறான

சூழ்நிலைகளையும் சந்திக்க தேவன் விருப்பமுடையவராகவும், வல்லமையுடையவராகவும் இருக்கிறார். அவரிடம் நம்முடைய பாரங்களை வைத்துவிட பேதுரு அப்போஸ்தலனும் ஆலோசனைச் சொல்கிறான். ஏனென்றால் இயேசுக்கிறிஸ்து நம்மை விசாரிக்கிறவராக இருக்கிறார் என்று வேதம் சொல்கிறது. ( 1 பேதுரு 5–7) தேவன் தம்முடைய வார்த்தைகளை மறுதலிக்கமாட்டார். எனவே அவருடைய வார்த்தைகள் வழியாக நாம் அவருடைய வாக்குத்தத்தங்கள் மேல் உரிமை பாராட்ட முடியும்.

## *நிலைமைகளை அப்படியே விவரித்தலும் பெலகீனத்தை ஒப்புக்கொள்ளுதலும்*

நாம் எந்த சூழ்நிலையின் மத்தியிலும் வெற்றிகளைப் பெறமுடியும். ஆனால் அதற்குமுன் நமக்கு முன்னுள்ள பிரச்சினைகளை அப்படியே மறைக்காமல் தேவனிடம் சொல்ல வேண்டும். தேவனுடைய வல்லமை நம்மிடம் செயல்படும் முன்பு, நாம் நம்முடைய உண்மையான நிலைமைகளை தெளிவாக அறிந்துகொள்வது மிகவும் முக்கியமானது. நாம் எங்கே இருக்கிறோம்? நம்முடைய பலம் எவ்வளவு? நமக்கு முன்னாலுள்ள பிரச்சினைகள் எவ்வளவு? இவைகளைக் குறித்த தெளிவான அறிவு நிச்சயம் வேண்டும். முதலில் நாம் தேவனிடமிருந்து எதையாவது பெறுமுன்பு, நம்முடைய நிஜமான நிலைமைகள் உணரப்பட வேண்டும்.

யெப்தா என்பவன் அம்மோன் புத்திரர்களின்மேல் ஒரு பெரிய வெற்றியினை பெறும்முன்பு, தன்னுடைய காரியங்களையெல்லாம் மிஸ்பாவிலே தேவனுடைய சந்நிதியில் சொன்னான். (நியா 11–11) அதன்பின்னரே ஆவியானவர் அவன்மேல் இறங்கினார். அவன் பெரிய வெற்றியைப் பெற்றான். ஒரு மருத்துவரிடம் ஒரு நோயாளி தன் வியாதியை அப்படியே சொல்ல வேண்டும். ஒரு வக்கீலிடம் ஒரு குற்றவாளி எதையும் மறைக்காமல் சொல்ல வேண்டும். இல்லையென்றால் மருத்துவர் நோயை குணப்படுத்தவும் முடியாது.

வக்கீல் போராடி குற்றவாளிக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுக்கவும் முடியாது. அப்படியே தேவனுக்கு முன்னால் நம்முடைய தற்கால நிலைமைகள் அப்படியேச் சொல்லப்பட வேண்டும்.

தேவனிடம் தன்னுடையத்தோல்விகளை வெட்கப்படாமல் அறிக்கையிடும் மனிதன், வெளியில் வெற்றிவீரனாக நிற்க முடியும். யோசபாத் ஒரு பெரிய மன்னன். ஒரு பெரிய வீரன். ஆனாலும் இப்போது தன்நிலமையை உணருகிறான். எங்களுக்கு விரோதமாக வந்த இந்த ஏராளமான கூட்டத்திற்கு முன்பாக நிற்க எங்களுக்கு பலம் இல்லை என்று மனந்திறந்து தன் நிலமையை தேவனிடம் வெளிப்படுத்துகிறான். தேவன் எல்லாவற்றையும் காண்பது உண்மைதான், ஆனால் நாம் நம்முடைய நிலைமையை உண்மையாக ஒப்புக்கொள்கிறோமா என்பதை நம்முடைய அறிக்கைகள் வழியாக அறிய விரும்புகிறார்.

முதலில் உங்கள் நிலைமைகளைக் குறித்த காரியங்களை நீங்கள் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். எதையும் கண்டுகொள்ளாமல் இருக்கக்கூடாது. காண வேண்டும், ஆனால் கலங்கிப்போக இடம் கொடாமல் அப்படியே கர்த்தரிடம் சொல்லவேண்டும். இதுவே தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் என்பதின் உண்மை. (பிலி 4–6) நம்முடைய வெறுமையான நிலைகளை நாம் உணரும் வேளை வந்த பின்புதான், தேவன் அந்தப் பகுதிகளை நிரப்புவதற்கான வாய்ப்பினை பெறமுடியும்.

எதுவாக இருந்தாலும் தேவனுக்கு முன்பாக உண்மையும், உத்தமுமான ஒரு நிலமை வேண்டும். ஜெபத்தில் ஒன்றும், செயலில் இன்னொன்றுமாக இருக்கக்கூடாது. பலர் சொல்லுவார்கள். ஆனால் நிஜவாழ்க்கையில் தங்களால் எல்லாம் கூடும் என்ற மனோபாவத்தில் செயல் படுவார்கள். சிலவேளை சில பிரச்சனைகளை சந்திக்கிறோம். அவைகளை சமாளிக்க சில வழிகளை நாம் வைத்திருப்போம். ஆனால் ஜெபவேளையில் "எனக்கு எந்த வழியும் இல்லை" என்று

சொல்லுவோம். ஜெபத்தில் "நீரே தஞ்சம்" என்போம். செயல்முறையில் நம்மைச் சார்ந்தே ஓடிக்கொண்டிருப்போம். எனவே பல வேளைகளில் ஒரு வெற்றியினைக் காணும்போது அது கர்த்தரால் வந்ததா அல்லது நம்முடைய சொந்தத் திறமையால் வந்ததா என்று பகுத்து அறிய முடியாமல் போகிறது.

நாம் உண்மையைச் சொல்லவேண்டும். நம்மால் முடியாததை முடியாது என்று சொல்லவேண்டும். முடியும் என்று எண்ணத்தகுந்த காரியங்களையும் மறைக்காமல் அப்படியே அறிக்கையிட வேண்டும். தேவனிடம் உதவியைத் தேடினால், அதை அவரிடமிருந்துப் பெற எதிர்பார்த்து காத்திருக்க வேண்டும். பொறுப்புகளை ஒப்படைத்தால் அவர் காட்டும் வழிகளையும் நாம் ஏற்க தயாராக இருக்கவேண்டும். அவருடைய வழிக்காக ஜெபித்துவிட்டு, நம்முடைய வழிகளையே சார்ந்து செயல்படக் கூடாது.

தாவீது ராஜா எதையும் திட்டவட்டமாக கேட்பவன். கேட்டபடியே தேவனிடமிருந்து வருவதற்காகக் காத்திருப்பவன். எனவேதான் அவனால் "நீரே இதைச் செய்தீர்" என்று உறுதியாக நம்பி தேவனைத் துதிக்க முடிந்தது. (சங் 55–9) கர்த்தரை நாம் நம்பவேண்டும். நம்பியப்படியே அந்த நம்பிக்கையின்மேல் சார்ந்திருக்கவும் வேண்டும். அதுவே அவரை நம்பியிருப்பதின் அடையாளம்.

## எதைச் செய்யப்போகிறோம்

இறுதியாக உங்கள் தீர்க்கமுடியாத பிரச்சனைகளின் நடுவில் என்ன முடிவு எடுக்கப் போகிறீர்கள் என்பதை முடிவு செய்ய வேண்டும். உங்கள் முடிவே உங்கள் வெற்றித் தோல்வியை முடிவுசெய்யும். நீங்களாக உங்கள் பலத்தில் ஓடப்போகிறீர்களா? அல்லது தேவபெலனை உங்கள் பெலனாக மாற்றப் போகிறீர்களா? இந்த பாரத்தை நீங்களே சுமக்கப் போகிறீர்களா? அல்லது கர்த்தர்மேல் வைக்கப் போகிறீர்களா? எதுவானாலும் வேகமாக தெளிந்த மனதுடன்

தீர்மானம் செய்யவேண்டும்.

பொறுப்பை அவரிடம் ஒப்படைத்து விட்டால், அதை அவர் நிறைவேற்றுவார் என்பதை நம்ப வேண்டும். யோசபாத் தேவனிடம் நிலமையைச் சொன்னான். தன்னுடைய பெலகீனத்தை அறிக்கையிட்டான். கடைசியாக அந்த இக்கட்டான சூழ்நிலையில் கர்த்தரையே நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்க முடிவு செய்தான். அவ்வண்ணமே நோக்கிப் பார்க்கவும் செய்தான்.

சூழ்நிலைகளை நோக்கிப் பார்த்துக்கொண்டிருப்பவர்களுக்கு தேவன் உதவிசெய்ய முடியாது. தன்னுடைய பலத்தைச் சார்ந்து இயங்குகிறவர்களுக்கு அவரால் பலனில்லை. எல்லாவற்றையும் நோக்கிப் பார்க்கிற கட்டம் வந்தபின்புதான் தேவன் அவர்கள் வாழ்வில் பெரிய வெற்றிகளைக் கட்டளையிட முடியும்.

மறுபடியும் ஆபிரகாமைப்போல மேல் நோக்கிப் பார்வையைத் திருப்புங்கள். தனக்கு உதவிகள்வரும் பர்வதங்களை நோக்கி சங்கீதக்காரன் தன்கண்களை எறெடுத்ததுபோல, உங்கள் பார்வையும் இயேசுகிறிஸ்துவின்மேல் இருக்கட்டும், ஒருமுறை அவர்மேல் பாரங்களை வைத்துவிட்டால், மறுபடியும் பாரங்களையே பார்த்துக் கொண்டிராமல், பாரங்களை சுமப்பேன் என்று வாக்களித்த இயேசுவையே நோக்கிப் பாருங்கள். பார்வை பிரச்சனைகள் மேலிருந்தால், இயேசுவைக் காணமுடியாது. பார்வை இயேசுவின்மேல் இருந்தால் பாரங்களை அங்கே காண முடியாது.

தன்னைக்கொண்டோ, தன்னுடைய இராணுவத்தைக்கொண்டோ சமாளிக்க முடியாத பிரச்சனையின் நடுவில் யோசபாத் திடமான ஒருமுடிவு எடுத்தான். எதிரிகளின் ஏராளமான சேனைகளின் மேலிருந்த பார்வையை திருப்பினான். தன்னிடம் இருக்கும் யுத்த வீரர்களின் மேலிருந்தும் பார்வையைத் திருப்பினான். என்ன செய்வது என்று முடிவு எடுத்தான். முற்றிலுமாக தன் பார்வையை தேவன்மேல்

வைத்தான். தன்னோடிருந்தவர்களின் பார்வையையும் கர்த்தர் மேலிருக்கச் செய்தான். "*எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக் கொண்டிருக்கிறது* " என்று தேவனிடம் தன் மேலான நிலையைச் சொன்னான். (2 நாளா – 20–12).

இன்னுமொரு காரியத்தை இங்கே நன்கு கவனிப்பது நல்லது. உங்களுடைய எல்லாவிதப் பிரச்சனைகளிலிருந்தும் கர்த்தர் உங்களை விடுவித்து வெற்றியை பெற்றத்தர தயாராக இருக்கிறார். ஆனால் ஒருமுறை அவரிடம் நம்முடைய சுமைகளை வைத்துவிட்டால் அதற்குப் பின்னர் அவர் தம்முடைய வழிகளிலேயே காரியங்களைச் செய்கிறார். அவருடைய வழிகள் நம்முடைய வழிகளை ஒத்திருப்பதில்லை. (ஏசா 55–8) எனவே அவரை நம்பி, அவரைச் சார்ந்து, அவரிடமிருந்து முடிவுகளை எதிர்பார்த்திருப்பதே சிறந்த வழி, நம்முடைய கண்கள் வழிகளைக் காணமுடியாதப் பகுதிகளில், அவருடையக் கண்கள் பாதைகளைக் காண்கின்றன. அவருடைய வழி கடலிலும், அவருடைய பாதைகள் திரண்ட தண்ணீர்களிலும், இருக்கிறது. ( சங். 77–19).

அவர் எப்போதுமே புதியக் காரியங்களைச் செய்கிறவர். அதுவே அவருடைய விருப்பம். (ஏசா – 43–10) புதிய காரியம் எப்போதுமே நம்முடைய நடைமுறையிலுள்ள பழைய வழிகளுக்கு ஒத்திருப்பதில்லை. அதுவந்து தோன்றுகின்ற வரையிலும் நம்மால் அதன் வடிவத்தைக் காண முடியாது. அது பாலைவனப் பகுதிகளிலே ஆறுகளைப் போலவும், காட்டுப் பகுதிகளில் வழிகளைப் போலவும் அதிசயமாகவே இருக்கும்.

கடைசியாக யோசபாத் வெற்றிவாகை சூடிய விபரங்களை சுருக்கமாகக் காண்போம். வெற்றியைக் காண எந்த சூழ்நிலையும் இல்லாதபோது ஒருமனதுடன் தேவனிடம் ஓடிவந்தான். அவரையே தேடினான். அநேகரை அவனுடன் சேர்ந்து தேடவும் செய்தான். நிலமைகளை மறைக்காமல் கர்த்தரிடம் சொன்னான். பலவீனங்களை மறைக்காமல் வெளியிட்டான். தேவன்மேல் மட்டுமே கண்களை

வைத்துக் காத்திருந்தான். கர்த்தர் அவைகளைக் கவனித்தார். தம்மைத் தேடுகின்றவர்களுக்கு அவர் சமீபமாக இருப்பதை நிரூபித்தார். யோசபாத் கர்த்தரோடு பேசினான். இப்போது கர்த்தர் யோசபாத்திற்கு யகாசியேல் என்ற தீர்க்கத்தரிசி வழியாக மறுபதில் கொடுத்தார்.

யோசபாத் செய்யவேண்டிய யுத்தத்தை தாம் ஏற்றுக் கொண்டதாக சொன்னார். "யுத்தம் உங்களுடையதல்ல; என்னுடையது" என்றார். (2 நாளா 20–15) ஆனால் கர்த்தரின் சொல்படி அவர்கள் புறப்பட்டு சென்றார்கள். போர்முனையை நோக்கிப் புறப்பட்டார்கள். முன்னால் நடப்பவர்கள் ஆயுததாரிகள் அல்ல. எதிரிகளை வீழ்த்த வல்லவர்கள் அல்ல. கர்த்தரை துதித்ப் பாடுகிறவர்கள் பாடிய படியே, துதித்தபடியே முன் சென்றார்கள். கர்த்தர் தம்முடைய வழியில் எதிரிகளோடு யுத்தம் செய்தார். எதிரில் பார்த்த போது எல்லா எதிரிகளும் அங்கே வீழ்ந்து கிடந்தார்கள். இல்லை, கர்த்தரால் வீழ்த்தப்பட்டிருந்தார்கள். யோசபாத் யுத்தம் செய்யவில்லை. ஆனால் பெராக்கா என்னும் இடத்தில் கூடி கர்த்தர் தந்த பெரிய வெற்றிக்காக ஸ்தோத்திரம் செய்தார்கள். (2 நாளா 20–26)

# ஆசிரியரின் பிற நூல்கள்

1. மகிழ்ச்சியின் பாதைகள்
2. இறை ஆசியுடன் இனிய குடும்பம்
3. வெளிச்சம் வெளியரங்கமாக்கும்
4. வழிகாட்டும் சிந்தனைகள்
5. சிலுவையில் இயேசுவின் இதய ஓசைகள்
6. நம்பிக்கையில் சந்தோஷமாயிருங்கள்
7. பரிசுத்த வாழ்வின் பாதையில்
8. நாம் ஏன் ஜெபிக்க வேண்டும்?
9. துதிமலர்கள் ஆயிரம்
10. வெற்றிகரமாக ஓடுங்கள்
11. வல்லமையாய் ஜெபிப்பது எப்படி?
12. ஆராதனையும் அனுதின வாழ்க்கையும்
13. விசுவாசத்தின் பிரதிபலிப்புகள்
14. சிலுவையின் பாதையில் சில மனிதர்கள்
15. துக்கம் சந்தோஷமாக மாறும்
16. ஆசீர்வாதங்கள் தடைபடுவது ஏன்?
17. கிறிஸ்தவம் பேச்சில் அல்ல ....செயலில்
18. ஜீவ நீரோடை (தினசரி தியான நூல்)
19. அனுதின வாழ்வில் தேவன் (தினசரி தியான நூல்)
20. தேவனின் பாதையில் தினமும் (தினசரி தியான நூல்)
21. இன்று நான் இயேசுவுடன் (தினசரி தியான நூல்)
22. தினமும் தேவனை நோக்கி (தினசரி தியான நூல்)

(IN ENGLISH)

23. "Stream of Life" (Daily Devotional Year Book)
24. "God's Guidance Today" (Daily Devotional Year Book)

★ ஜீவ நீரோடை மாத இதழ்

(புத்தகங்களைக் குறித்த விபரங்களுக்கு எழுதவும்.)



## பரிசுத்த வாழ்வின் பாதையில்

### ஆசிரியரை பற்றி...

சகோ. சாம்சன் பால்

ஜீவ நீரோடை தினசரி தியானநூல், எழுச்சிமலர் மாதஇதழ் ஆகியவற்றின் வாயிலாக ஆயிரக்கணக்கானோருக்கு சத்தியத்தின் பாதையை மிகத் தெளிவாகவும், சரியாகவும் காண்பித்து வருகிறவர். ஆழமான ஆவிக்குரிய உண்மைகளைக்கூட எல்லாரும் எளிதில் விளங்கிக் கொள்ளும்படி எளிய நடையில் விளக்குவதில் அதிக சிரமம் எடுத்து செயல்படுகிறவர்.

இவருடைய எழுச்சியூட்டும் பிரசங்கங்களிலும், எழுத்துக்களிலும் ஆவியின் ஐக்கியமும், அனலும் அஸ்திபாரமான போதனைகளும் மிகுதியாக இருப்பதை அநேகர் உணர்ந்து கர்த்தரை துதிக்கின்றனர். பல்வேறு தலைப்புகளில் சிறந்த பல புத்தகங்களை வெளியிட்டுள்ள இவருடைய இந்தப் புத்தகம் உங்களுக்கு மிகச் சிறந்த ஒரு ஆவிக்குரிய வழிகாட்டியாகவே இருக்கும்.